விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 கார்த்திகை 23 ர. ஆகிர் 6 இதழ் 301

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 9-12-1986

## "தமிழர், சிங்களவர் அனைவரும் இலங்கை பிரஜைகளானால் ஏன் துருப்பினர் எமது மக்களைக் கொலைசெய்கின்றனர்?"

—'பிரபா'கேள்வி

சென்னை, டிச-8

''இலங்கை ஜனாதிபதி கூறுவது போல் இலங்கையில் வாழும் மக்கள் அனைவரும் இலங்கையரேயானால் தமிழ்ப் பகுதிகளில் வாழும் அப்பாவிப் பொதுமக்களை ஏன் அவரது துருப்புக்கள் படுகொலை செய்கின்றன?''

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன், இந்திய சஞ்சிகையான 'தவீக்'கிற்கு அளித்த பேட்டியில் கேட்டுள்ளார்.

தமிழர் தாயகம் என்ற தமிழ்களின் அடிப்படைக் கோரிக்கை தமக்குச் சாதகமாக நிறைவேற்றப்பட்டாலன்றி மேலதிக பேச்சுவார்த்தைகள் நடைபெற முடியாது என்பதை வலியுறுத்திய திரு. பிரபாகரன் தமது பேட்டியில் மேலும் கூறியதாவது:-

''தமிழக முதல்வர் கூறியது போன்று, இலங்கை அரசின் தற்போதைய நிலையால் தீர்வு எதுவும் ஏற்படாது. துரதிர்

(7-ம் பக்கம் பார்க்க)

● வடபகுதி மக்களின் நலனை முன்னிட்டு

# வவுனியாவரை மேலதிக ரயில்சேவை நடத்த முடிவு

## பாதுகாப்புப்படையினர் நடவடிக்கை எடுப்பர்!

(கொழும்பு)

**வடபகுதி மக்களின் நலனை முன்னிட்டு கொழும்பிலிருந்து வவனியா வரை மேலதிக ரயில்சேவை ஒன்றை நடத்துவதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்வதென நேற்று வன்னி பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற மாநாடொன்றில் தீர்மானிக்கப்பட்டது. இதனைச் செயற்படுத்துவதற்கு பாதுகாப்புப் படையினர் நடவடிக்கை எடுப்பர்.**

வன்னி ஆயுதப்படை முகாமைச்சேர்ந்த பிரிகேடியர் டென்சில் கொப்பேகடுவ தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டில் ஆயுதப்படை உயரதிகாரிகள், பொலிஸ் உயரதிகாரிகள், வவனியா பிரஜைகள் குழு, வங்கி உத்தியோகத்தர்கள், வர்த்தகர் சங்கம், வவனியா மாவட்ட இ. தொ. கா. பிரதிநிதிகள் ஆகியோர் பங்குபற்றினர்.

குறிப்பிட்ட இந்த விசேஷ ரயில் வண்டி பிற்பகல் ஐந்து மணிக்கு வவனியாவை வந்தடையவேண்டுமெனவும் மீண்டும் வவனியாவிலிருந்து ஏழு மணிக்குப் புறப்பட வேண்டுமென்றும் தீ மானிக்கப் பட்டது

பதின்மூன்று தீர்மானங்கள் மேற்கொள்ள ப் ப ட் ட ன. மேலும் சில பின்வருமாறு:

வடபகுதிக்கான எரிபொருள் கொழும்பிலிருந்து எடுத்து வந்து வவனியாவில் பாரிய அளவில்சேகரித்து வைத்தபின் அங்கிருந்து வடபகுதி முழுவதற்கும் விநியோகம் செய்வதற்கு ஒழுங்குசெய்யப்படும்.

வடபகுதி மக்களுக்கு வசதி செய்யும் வகையில் பஸ் சேவை அபிவிருத்தி செய்யப்

5ம் பக்கம் பார்க்க]

## இதோ ஜனாதிபதி கூறுகிறார்--
## இவ்வருட பாதுகாப்புச் செலவீனம் ஐந்து வருட மகாவலி அபிவிருத்தி செலவுக்குச் சமன்

கொழும்பு, திங்கள்

நாட்டின் அபிவிருத்தி பயங்கரவாதத்தால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது அரசாங்கம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சமாதானத்தை ஏற்படுத்த சகலமுயற்சிகளையும் மேற்கொண்டுவருகிறது

அரசாங்கம் பெருந்தொகையான பணத்தை ஆயுதங்கள் கொள்வனவு செய்வதில் செலவிட்டுள்ளது. இவ்வருடம் பாதுகாப்புச் செலவீனம் மகாவலித்திட்டத்தில் ஐந்துவருடம் செலவிட்ட பணத்திற்குச் சமமாகவுள்ளது. (கே)

## 'காளி' ஆட்சிமுடிந்து இப்போது 'பிரம்மா' ஆட்சி

கொழும்பு, திங்கள்

தேர்தல் ஆணையாளரின் அண்மைய அறிக்கையில் 1982ம் ஆண்டு சர்வஜன வாக்கெடுப்புத் தொடர்பாக தெரிவிக்கப்பட்ட லஞ்ச, ஊழல் மோசடிகளிலும் பார்க்க மக்கள் தமது உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றைப் பெறுவதில் மிகநம்பிக்கையுடையவர்களாகவுள்ளனர்.

திருமதி பண்டாரநாயக்காவின் காலத்தில் நிலவிவந்த 'காளி' ஆட்சி 19 7 முடிவுக்குவந்துள்ளது. இப்போது 'பிரம்மா' ஆட்சியின் காலம். [கே]

## அபிவிருத்தி முயற்சிகளை பாதிக்கின்றது

கொழும்பு, திங்கள்

பயங்கரவாதத்தை எதிர்த்துப் போரிடுவதற்கு வாங்கப்படவிருக்கும் பெருந்தொகையான ஆயுதங்கள், வெடிமருந்துகள், கப்பல்கள் குண்டுவீச்சுவிமானங்கள் மிகவும் பாரதூரமாக அரசாங்கத்தின் அபிவிருத்தி முயற்சிகளைப் பாதிக்கின்றது. (கே)

## வாகனபோக்குவரத்து இல்லை

(மட்டக்களப்பு)

மட்டு - கல்முனைப் பாதையில் நேற்று மூன்றாவது நாளாக வாகனப் போக்குவரத்து நடைபெறவில்லை: நேற்றுப் பிற்பகலில் ஒருசில தனியார் வாகனங்களே இவ்வழியால் சென்றன. [கே]

## இ. போ. ச. ஊழியர் வேலைநிறுத்தம்

(மட்டக்களப்பு)

காத்தன்குடியில் இ. போ. ச. ஊழியர்கள் பத்துப்பேர் கொல்லப்பட்டமைக்குக் கண்டனம் தெரிவித்தும், ஆட்சேபித்தும், அனுதாபம் தெரிவிக்குமுகமாகவும் நேற்று மட்டக்களப்பு மாவட்ட இ. போ. ச. ஊழியர்கள் அனைவரும் வேலை நிறுத்ததில் ஈடுபட்டனர்

## ஜனாதிபதி டிக்ஷித் 15 நிமிட சந்திப்பு

(கொழும்பு)

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகர் திரு. ஜே. என். டிக்ஷித்தும் பதினைந்து நிமிடநேரம் தனியாகச் சந்தித்துப் பேச்சுவார்

[7ம் பக்கம் பார்க்க]

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான அக்ஷய வருடம் கார்த்திகை மாதம் 25-ம் நாள் (11-12-86) வியாழக்கிழமை மு. ப. 8-57 மணிமுதல் 10-42 மணி வரையுள்ள சுப முகூர்த்த வேளையில்

| எனது புத்திரன் | எமது புத்திரி |
| --- | --- |
| திருவளர்செல்வன் | திருவளர் செல்வி |
| **யோகநாதன்** | **பிரேமகுமாரி** |
| அவர்கட்கும் | அவர்கட்கும் |

நல்லூர் சிவன்கோவிலில் நடைபெற இருக்கும் திருமண வைபவத்திற்கு தாங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தங்கள் நல்வரவை நாடும்

| | |
| --- | --- |
| திருமதி | திரு. திருமதி |
| தெ. சுந்தரம்பிள்ளை, | வை. பொன்னம்பலம், |
| 50, பிரவுண் வீதி, | சிறுப்பிட்டி தெற்கு, |
| (புதிய இல. 218,) | நீர்வேலி. |
| யாழ்ப்பாணம். | (C 6251) |

## கைது செய்யப்பட்ட சிங்களப் பெண் விரிவுரையாளரை விசாரணையின்போது எலி கடித்ததாம்!
### கைதுக்கு இந்திய கல்விமான்கள் எதிர்ப்பு

கொழும்பு; திங்

இலங்கை புலனாய்வுத் துறையினரால் கைதுசெய்யப்பட்ட களனி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பெண் உதவி விரிவுரையாளர் ஒருவர் சி ஐ டி யின் 4-ம் மாடிக் கட்டடத்தில் விசாரணை செய்யப்பட்ட போது எலியினால் கடிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

களனி பல்கலைக்கழகத்தில் மேலைத்தேய கவின்கலை உதவி விரிவுரையாளராகக் கடமையாற்றும் செல்வி பல்ஸரா லிய

(7-ம் பக்கம் பார்க்க)

## பிற்போக்கு அரசை தூக்கி எறிவதற்கு ஒன்றிணைந்து போராடுவோம்

யாழ்ப்பாணம், செவ்.

''யு. என். பி. அரசாங்கம் தேசிய இனப்பிரச்னைக்கு ஒரு தீர்வு காணப் போவதாக நடித்துக்கொண்டு அமெரிக்க இஸ்ரேலிய ஏகாதிபத்திய வாதிகளின் உதவியுடன் அனைத்து தமிழ் மக்களையும் அழித்தொழிப்பதற்கு ஆயத்தமாகும் நெருக்கடியான சூழ்நிலையில் தமிழ்மக்களின் போராட்டத்தை நீங்கள் ஆதரிப்பதை நாம் மிகுந்த மகிழ்ச்சியுடன் நோக்குகின்றோம்'' என்று அண்மையில் யாழ்ப்பாணம் வந்த விஜயகுமாரணதுங்காவிடம் நவ

(7-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

மெய்கண்டான் கலண்டர், டயறிகள் பெருந்தொகையாக விற்பனைக்குண்டு, வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். விலை No 1 - 29.50 No 2 - 27 50 மகிமிலன் புத்தகசாலை 3 பஸ் நிலையம் யாழ்ப்பாணம். (C 6165)

சிறிய அளவிலான போறிங் மெசின் [Boring Machine], பொலிசார் மைக்ரோ மீற்றர் செற், 11½'X7½' புதிய சுருக்குக்கேற் ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: ஸ்ரார் ரேணிங் வேக்ஸ், 233, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். C 6213

சொந்தப்பாவனைக்கு அரிந்த கொங்கிறீற் கற்கள் 500 விற்பனைக்கு உண்டு. Benjamin Mariathas, 732, Hospital Road, Jaffna. Opp. Sub Post Office அல்லது "Selvaraja Bhavanam", Sengutha Laine, Thirunelvely East, Jaffna. (C6231)

நீர்வேலிச் சந்திக்கு அருகாமையில் யாழ். பருத்தித்துறை வீதியில் [12. கி. மீ போஸ்ட் முன்பாக] சகல வசதிகளுடனான வீடும், காணியும் உடனடியாக விற்பனைக்குண்டு. எஸ். பி. ஜெயம், நீர்வேலி. (C 6190)

## விற்பனைக்கு

தளபாடங்கள், தேக்கு, ஸ்ரீல், வேம்பு அலுமாரிகள், கட்டில்கள், Show case, விலியர்ஸ் தண்ணீர் இறைக்கும் இயந்திரம்-Water-Pump, சிங்கர் Zig Zag மெஷின், வயலின், பெல்ஜியம் கண்ணடிகள், Electric Fan, English Type writer, Pyrex கிளாஸ் வகைகள் உடன் விற்பனைக்கு M. Thiagarajan, 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். C 6193

சாவகச்சேரி நுணுவில் கிழக்கு தாளையம்பதி வீதிக்கு அருகாமையில் 3 பரப்பு வீடு கட்டவும், தோட்டம் செய்யவும் உண்டு. தேவைப்படுவோர் நேரில் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ளும் முகவரி: அ. சுப்பிரமணியம், தாளையம்பதி வீதி, நுணுவில் கிழக்கு, சாவகச்சேரி. [C 6250]

## சேவை

சகல கலர் பிலிம் சுருள்களையும் Printing செய்துகொள்ளுங்கள். Post Card Colour Print 4/90 மட்டுமே. Free Processing, Quick Star, 163, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C 6237)

சிங்கப்பூரில் பணிப்பெண்களுக்கான

## வேலை வாய்ப்பு

* ஆங்கிலம் பேசக்கூடியவர்கள்.
* தமிழ் / மலே மொழிகள் பேசக்கூடியவர்கள்.

வயது 22 தொடக்கம் 35 வரை

1. இரண்டு 'போஸ்காட்' அளவான கலர் புகைப் படம்.
2, 10 'பாஸ்போர்ட்' அளவிலான கறுப்பு / வெள்ளை புகைப்படங்களுடன் விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:

**Royal Agency (Pte) Ltd.,**
**158, New Chetty Street,**
**Colombo - 13.**

APPROVAL REF, AL/470/11/86 (A-2882)

## உபநயன சுபமுகூர்த்த அழைப்பு

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் அக்ஷய ஸூ கார்த்திகை மீ 24ந் உ [10-12-86] புதன்கிழமை தசமித்திதியும், சித்த யோகமும், உத்தரட்டாதி நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் காலை 10-45 மணிக்குமேல் 12 மணிக்குள் வரும் கும்பலக்கின சுபஹோரையில்,

- சிரஞ்சீவி கு. குருசாமிசர்மாவுக்கு -
[காலஞ்சென்ற குமாரசாமிக்குருக்கள் அவர்களின் ஏகபுத்திரன் கைலாசபிள்ளையார் தேவஸ்தானம்]

சௌள உபநயன பிரம்மோபதேசம் செய்ய ஸ்ரீ கைலாசபிள்ளையாரின் அனுக்கிரகத்துடனும, ஸ்ரீகாஞ்சி சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்களின் அனுக்கிரக ஆசியுடனும் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு ஷை முகூர்த்தம் நல்லூர் ஸ்ரீ கைலாசபிள்ளையார் ஸந்நிதியில் நடப்பதால் தாங்கள் தங்கள் இஷ்டமித்திரபந்துக்களுடன் வந்திருந்து நடாத்தி வைத்து குழந்தையை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்,
கு. மணிக்குருக்கள்,
கு. கோபாலசர்மா.

கைலாச பிள்ளையார் தேவஸ்தானம்,
நல்லூர் - யாழ்ப்பாணம். C 6243

## போஷாக்கு கருத்தரங்கு

சுண்டுக்குளி, திங்கள் கைதடி குருசாமி வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் அதிபர் எஸ். கனகசபாபதி தலைமையில் போஷாக்கு கருத்தரங்கொன்று நடைபெற்றது.

## தேவை

பேக்கரியில் சகலவிதமான பிஸ்கட், கேக், பாண், பணிஸ் முதலியன தயாரிப்பதற்கு அனுபவம்மிக்க ஆட்கள் தேவை. விரும்புவோர் நேரில் வரவும். தகுந்த சம்பளம் வழங்கப்படும். தொடர்பு: எலீம் சிறுவர் இல்லம், மெமோறியல் ஒழுங்கை, மானிப்பாய். [C 6254]

புதிய Portable Video Deck தேவை. National -100 Model விரும்பத்தக்கது. மேலதிக பற்றரியும் தேவை. விலை விபரம் குறிப்பிட்டு தொடர்பு கொள்ளவும். செ. இரவிக்குமார், டச்வீதி, தெல்லிப்பழை. (C 6245)

சிறந்தமுறையில் மணிக்கூடு திருத்துபவர்கள் உடன் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும்: தேவன் என்டர்பிறைஸ், (தேவன்வேச்வேக்ஸ்) 64, பஸ் நிலையம், சுன்னாகம் C 6178

## சேவை

எப் பொருள்களானாலும் புதியனவைகளானாலும், பழையனவைகளானாலும் வாங்கவும்/விற்கவும் தினமும் எம்மை நாடுங்கள். எங்களிடம் புதியனவும் பழையனவுமாகிய நானாவித பொருட்கள் மலிவு விற்பனைக்கிருக்கின்றன. லக்கி பெனிபிட் கொம்பனி லிமிட்டட் பொதுச் சந்தை [சந்திக் கருகாமையில்] கோப்பாய். [C 6088]

## வகுப்புகள்

A/L 87 துரிதமீட்டல் வகுப்புகள் [Paper Class] ஆரம்பமாகின்றன. விலங்கியல் தம்பிராஜா. Tue and Fri. 6-15 7-15 (9-12-86). தாவரவியல் ஆசிரியர் சிவவீரசிங்கம் Mon.- Wed. 6-30—7-30 (10-12-86) 3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (P. M. C. முன்பாக) (C-6242)

## கல்வி

ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சை. பரீட்சை முறை தழுவிய விரிவான, விளக்கமான, அச்சிடப்பட்ட பயிற்சிப் பாடங்கள், கட்டுரைகளுடன் கூடிய துரிதபோதனை. ஆரம்பம்: 10- 12- 1986 காலை 9 மணி. ஆசிரியர்: த. ந. பஞ்சாட்சரம், "ஷேக்ஸ்பியர், ஆங்கிலப் போதனா நிலையம்", நீர்வேலி. (C 6255)

## தவறிவிட்டது

இல: 548370698X குலமணி நவரட்ணம், 47/16, அனுலா வீதி, வெள்ளவத்தை என்பவருடைய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். இல: 27, களவத்துறை ஒழுங்கை, அராலி தெற்கு. [C 6257]

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி



**தம்பிப்பிள்ளை ஸ்ரீசேயானந்தபவன்**
தோற்றம்: 25-08-1948
மறைவு: 01-12-1984
திதி, அட்டமி: 09-12-1986

நீ மறைந்து இரண்டு ஆண்டு காலமாகியும் நினைவுகள் மறக்கமுடியாமல் இருக்கின்றன உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம். அன்பான தாய், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள் உடுவில் கிழக்கு, சுன்னாகம். [C6247]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**மகேஸ்வரி சிவப்பிரகாசம்**
(புலோலி)
தோற்றம்: 05-02-1915
மறைவு: 09-11-1986

காலஞ்சென்ற Dr. கு. சிவப்பிரகாசத்தின் மனைவியாரும், பாலம்பிகையின் தாயாரும், க. சிறிசிவலிங்கத்தின் (புறூணை) மாமியாருமாவார். உற்ற துணையாயும், தகுந்த வழிகாட்டியாயுமிருந்து எம்மைவிட்டு இறையடி சேர்ந்த எம் குலமாதாவிற்கு எமது அஞ்சலி.
மகள்,
மையிலாப்பூர்,
(C6223) சென்னை.

## வர்த்தக கல்வியில் ஆர்வம்

உடுவில், திங்கள் பாடசாலை மாணவர்களிடத்தில் வர்த்தக பாடம் படிக்க வேண்டுமென்ற ஓர் ஆர்வம் அண்மைக்காலங்களில் ஏற்பட்டு வருகிறது. இதற்கு முக்கிய காரணம் திறமை பெற்ற ஆசிரியர்கள் இக் கல்வியைப் போதிப்பதேயாகும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரியில் உயர்தர வகுப்பு வர்த்தக ஆசிரியர்களுக்கான இருநாள் பயிற்சி வகுப்புக்களின் முடிவில் யாழ். கல்வித் திணைக்கள பிரதம கல்வியதிகாரி திரு. கந்தசாமி கலந்துகொண்டு உரையாற்றிய போது கூறினார்.

## 31-ம் நாள் கண்ணீரஞ்சலி



**திரு. R S. இராசரத்தினம்**
(முன்னாள் கார்கில்ஸ் காசாளர் அன் சிங்கப்பூர் ஷிப்பிங் லைன்)

ஜெனனம்: 09-05-1933
மண்கும்பான் மேற்கு, வேலணை.

தெய்வீகம்: 09-11-1986
இல. 25, இராமகிருஷ்ண வீதி, வெள்ளவத்தை.

"வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும். வாசல் தோறும் வேதனை இருக்கும். வந்த துன்பம் எது வென்றாலும் வாடி நின்றால் ஓடிவிடாது."
-கவிஞர் கண்ணதாசன்

உங்கள் ஆன்மசாந்தி வேண்டி இறைஞ்சும் தாய் மாமன் மகன் செ. சிவஞானசம்பந்தன் (சரவணையூர் சோதிடன்), அதிபர், செட்டிபுலம், G T. M. S. வேலணை, மற்றும் சரவணையூர் அன்பு நெஞ்சங்கள்.

ம. ப. செல்லையா,
சோதி — நிலையம்,
"சிவா மகால்",
சரவணை மேற்கு,
வேலணை. [C 6187]

## கல்வி ஆண்டு 87 G. C. E. O/L | 3 பிரிவுக்கு

ஆண்டு 10, 9, 8, 7, 6ம் ஆண்டுக்கான தனித்துவமிக்க ஆசிரியர்களினால் கல்வி கற்பிக்கப்படுகின்றன

புதிய வகுப்பு ஆரம்பம்:
டிசம்பர் 10-ம் திகதி காலை 7-00 மணி
விபரங்கட்கு:—

**நிரு டியூஷன் சென்றர்,**
கோண்டாவில் கிளை, கொக்குவில்
(A 3227)

## பதவி வெற்றிடம்

பிரதேச பொருளாதார அபிவிருத்திக் கழகத்திற்கு (REDO) அங்கீகரிக்கப்பட்ட படவரைஞருக்கான (DRAUGHTSMAN) கல்வித்தகைமை பெற்ற, அனுபவம் வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

'றெடோ', 76, கண்டி வீதி, யாழ்ப்பாணம்

என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். தகுந்த வேதனம் வழங்கப்படும். விண்ணப்ப முடிவு திகதி: 13-12-1986.

செயலாளர்.

C 6244

# பெங்களூரில் நடந்த வன்செயல்களில் 8 பேர் மரணம்

# பொலிஸ் உட்பட 60 பேர் காயம்

பெங்களூர், டிசம்பர் 8

**கர்நாடகம் பெங்களூரில் நேற்று நடந்த வன்செயல்கள் மற்றும் பொலிஸாரின் துப்பாக்கிப்பிரயோகத்தில் எட்டுப் பேர் இறந்துள்ளதுடன் பொலிஸார் உட்பட அறுபதுக்குமதிகமானோர் காயமடைந்துமுள்ளனர்.**

சிவாஜிநகரிலும் மகாத்மா காந்தி சாலையிலும் நேற்று மாலை வரை இந்த வன்செயல்கள் நடைபெற்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வகுப்புவாத உணர்ச்சிகளை தூண்டும்வகையில் உள்ளூர் பத்திரிகையொன்றில் வெளியிடப்பட்ட செய்தியொன்றினை ஆட்சேபித்து மக்கள் கூட்டமொன்று ஆர்ப்பாட்டம் நடத்தியதையடுத்து இந்த வன்செயல்கள் இடம்பெற்றன.

பொலிஸாரின் இந்த நடவடிக்கைக்கு பதில் தாக்குதலாக வன்முறையாளர்கள் பொலிஸாரை நோக்கி கற்களை வீசினார்கள்.

வன்முறையாளரின் தாக்குதலினால் பொலிஸாரில் 33 பேர் வரை காயமடைந்தனர்.

இச்சம்பவத்தின் வன்முறையாளரை நோக்கி பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதில் எட்டுப்பேர் ஸ்தலத்திலே மரணமானார்கள். பலர் காயமடைந்தார்கள்.

இப்பொழுது இங்கு நிலைமை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக பொலிஸ் கமிஷனர் அறிவித்துள்ளார். (ஒ)

## உலகச் செய்திகள்

பொலிஸார் இந்த வன்செயல்களைக் கட்டுப்படுத்த முடியாது போகவே வன்முறையாளரை நோக்கி கண்ணீர் குண்டுகள் வீசினார்கள்.

தமிழ் நாடு சபாநாயகர் தீர்ப்பு

## சட்டவிரோதமென அறிவிக்கக் கோரிக்கை

சென்னை, டிச. 8

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஏழு எம். எல். ஏ. உறுப்பினர்களை பதவிநீக்கம் செய்துள்ள சட்டப்பேரவை சபாநாயகர் திரு. டி. எஸ். பாண்டியனின் தீர்ப்பை அரசியல் சாசனத்திற்கு எதிரானது என்று அறிவிக்குமாறு ராஷ்டிரபதி ஜெயில் ஜானி ஷெயில் ஸிங்கையும் தமிழ்நாடு கவர்னர் திரு. எஸ். எல். குரானாவையும் தி. மு. கழகம் வற்புறுத்தியுள்ளது.

ஹிந்தி எதிர்ப்பு கிளர்ச்சியில் இறங்கிய உறுப்பினர்கள் அரசியல் சாசனத்தின் ஒரு பகுதியைக் கொண்ட நகல்களை எரித்துள்ளதன்மூலம் தாங்கள் எதன்கீழ் பிரமாணம் எடுத்துக்கொண்டார்களோ அந்த அரசியல்சாசனத்தையே மீறியிருக்கிறார்களென சபாநாயகரின் தீர்ப்பு தெரிவித்தது.

தி. மு. கழக தலைவர் திரு. மு. கருணாநிதி சென்னையில் செய்தியாளரிடம் பேசுகையில் புதுடில்லியில் ராஷ்டிரபதியிடமும் மாநில கவர்னரிடமும் ஒரு மகஜர் கொடுக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார். (ஒ)

அமெரிக்க-ஈரான் ஆயுத விவகாரம்:

## சுவிஸ் வங்கி கணக்கை முடக்கி வைத்துள்ளது

வாஷிங்டன், டிச. 8

ஈரானுடனான அமெரிக்க ஆயுத பேரங்களிலிருந்து கிடைக்கும் இலாபங்களை நிக்கரகுவா கிளர்ச்சியாளர்களுக்கு திருப்பிவிடுவதற்காக பயன்படுத்தப்படுவதாய் சொல்லப்படும் வங்கிக் கணக்கை சுவிஸ்வங்கி முடக்கி வைத்துவிட்டது.

இந்த விவகாரங்கள் பற்றிய தன்னுடைய புலன்விசாரணை நடவடிக்கைகளுக்கு உதவி கோரி வாஷிங்டன் விடுத்த வேண்டுகோள் ஒன்றை அடுத்தே இந்த நடவடிக்கை என்று சுவிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வங்கியின் பெயரைக் குறிப்பி மறுத்துவிட்ட அந்த அதிகாரி அமெரிக்க வெளியுறவு இலாகா, வங்கியின் கணக்கு இலக்கத்தைக் கொடுத்தபின்னரே அந்தக் கணக்கு முடக்கிவைக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

"கொன்டரா" கிளர்ச்சிக்காரர்களுக்கான இராணுவ உதவியின்மீது அமெரிக்க பாராளுமன்றம் தடைவிதித்திருந்த ஒரு சமயத்தில் நிக்கரகுவா கிளர்ச்சியாளர்களுக்கு இந்த ஆயுத விற்பனைகளிலிருந்து மூன்று கோடி டாலர்கள்வரை அனுப்பிவைக்கப்பட்டதாக அமெரிக்க அற்றோனிஜெனரல் ஒருவர் தெரிவித்துள்ளார். (ஒ)

## பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டும்

நெல்லியடி திங்கள்

ஸ்ரீ சாரதாதேவி ஜயந்தி இம்மாதம் 23ம் திகதி பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் அண்மைக் காலத்தில் இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

நடைபெறவுள்ள ஜயந்தி விழாவின்போது மேற்படி குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு 2000/- ரூபா வைப்புப் பணச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் நத்தார் தினத்தை முன்னிட்டு விசேட நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக ஆச்சிரமப் பிரதம குரு சுவாமி சித்ரூபானந்தா கூறியுள்ளார். (சி)

## சகல மக்களும் சந்தோஷமாக வாழ முயற்சிப்பேன்

யாழ்ப்பாணம், செவ்.

வடக்குக்கும் தெற்குக்குமிடையிலுள்ள வேற்றுமை இடைவெளியை குறைப்பதற்கும் சகல மக்களும் அமைதியாகவும் சந்தோஷமாகவும் வாழ்வதற்கும் முயற்சி செய்வேன்.

யாழ். பழைய பூங்காவிற்கு முன்னால் திரண்டு நின்ற மக்கள்மத்தியில்பேசிய ஸ்ரீ லங்கா மக்கள் கட்சி தலைவர் இவ்வாறு கூறினார்.

மேல் மாடிகள், மதில்கள் மீதும், பிரதான வீதியிலும் ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் காணப்பட்டனர்.

## பொதுக்கூட்டம்

வேலணை, திங்கள்

வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கல்லூரிஅதிபர் திரு செ. வாதவிங்கம் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

## தொல்புரத்தில் மரம்நாட்டு விழா

யாழ்ப்பாணம், செவ்வாய்

தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் ஆலய வீதியில் இம்மாதம் 12ம் திகதி வெள்ளிக்கிழமை மரம் நாட்டு விழா நடைபெறவுள்ளது.

இம்மரம்நாட்டு விழாவை தொழில் அதிபர் க. கனகராசா ஆரம்பித்துவைப்பதுடன் பல நல்லின மரங்களையும் மக்களுக்கு வழங்குவார். (ஒ)

## வர்த்தகர் சங்கம் கோரிக்கை

பருத்தித்துறை. திங்கள்

பருத்தித்துறை அஞ்சல் அலுவலகத்தை தும்பளை நெல்லண்டைக்கு இடமாற்றுவதற்கு பலத்த கண்டனம் தெரிவித்துள்ள பருத்தித்துறை வர்த்தகர் சங்கம் இவ் அஞ்சல் அலுவலகத்தை தும்பளை நெல்லண்டைக்கு இடம் மாற்றுவதைக் கைவிடுமாறு அவசர தந்தி மூலம் யாழ் மாவட்ட தபால் அத்தியட்சகரைக் கேட்டுள்ளது.

## போஷாக்கு வீதம்

உடுவில், திங்கள்

பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவுகளில் உள்ளோரில் 48 வீதமும், பாடசாலை வயதை எட்டாத குழந்தைகளில் 50 வீதமும், தேசிய மட்டத்தில் 40 வீதமுமான மக்கள் போஷாக்குணவின்றி இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளின் வளர்ச்சி:

## பெற்றோரின் கடமை பற்றி கல்விப்பணிப்பாளர்

நெல்லியடி, திங்கள்

"இன்று வடபகுதியில் ஐந்நூற்றுக்கும் அதிகமான பாடசாலைகள் இயங்கிவருவதால் அரசாங்கம் ஒருசில பாடசாலைகளின் முன்னேற்றத்தில் மட்டும் கவனம் செலுத்தமுடியாது. ஆகவே அவற்றின் வளர்ச்சியைக் கவனிப்பதும் அவற்றின் தலைவிதியை நிர்ணயிப்பதும் பெற்றோரின் கடமையாகும்."

இவ்வாறு நெல்லியடிமத்திய மகாவித்தியாலயப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்டு உரையாற்றிய வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. ஜேய் காந்தராஜ் தலைமையில்நடந்த இவ்வைபவத்தில் தொடர்ந்து திரு. சுந்தரலிங்கம் உரையாற்றுகையில், வாழ்வில் ஒருவனை மேம்படச்செய்வது கல்வியே. சிறந்த கல்வி மூலமே மக்கள் ஒழுக்கசீலராகவும் நாட்டுப் பற்றுள்ளவர்களாகவும் வாழ முடியும் என்றார்.

முன்னாள் உடுப்பிட்டி எம். பி. திரு. நா. இராசலிங்கமும் மற்றும்பலர் பேசினர்.

## பயனுள்ள பொழுதுபோக்கில் மாணவர் ஈடுபடுதல் அவசியம்

உடுவில் திங்கள்

"பாடசாலைப் பிள்ளைகள் பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய வேளைகளில் பயனுள்ள பொழுதுபோக்குகளில் ஈடுபட வேண்டும். பாடசாலை நேரத்தைவிட கூடிய நேரத்தை பிள்ளைகள் பாடசாலைக்கு வெளியே செலவிடுவதால் அவர்களின் வளர்ச்சிக்கான கூடிய பங்கு பாடசாலைக்கு வெளியேதான் அமைந்துள்ளது, எனவே பெற்றோர்கள் தம்பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் ஆசிரியர்களைவிட கூடிய கவனம் எடுத்தல் அவசியம்"

இவ்வாறு நவாலி சென். பீற்றேஸ் றோ. க. த. க. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய அதிபர் திரு. நா. யோகராசா கூறினார்.

மேற்படி பாடசாலை மண்டபத்தில் அபிவிருத்தி சபையின் வருடாந்த கூட்டம் நடைபெற்றது. திரு. சி. ஜேசு இளையதம்பி, வண. பிதா. கிறிஸ்ரோடி. றொபேர்ட்ஸ், பிரம்மஸ்ரீ. சோ. நிர்மலேஸ்வர சர்மா ஆகியோர் கூட்டத்தில் உரையாற்றினர். (எ)

## பாராட்டு விழா

ஊர்காவற்றுறை. திங்.

அகில இலங்கை ரீதியிலும் யாழ். மாவட்டத்திலும் 6ம் ஆண்டுக்கான புலமைப் பரீட்சையில் 3ம் இடங்களைப் பெற்றுக் கொண்ட செல்வன் கு. கிருபாகரனுக்கும், செல்வன் இ. அம்பிகைபாலனுக்கும் சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலையில் பாராட்டு விழா இடம்பெற்றது.

## வீதி திருத்தம்

பண்டத்தரிப்பு, திங்.

போக்குவரத்துக்குச் சிரமமான முறையில் இருந்துவந்த மாதகல்- பண்டத்தரிப்பு பிரதான வீதி, மாதகல் மினி பஸ் உரிமையாளர் சங்கத்தின் உதவியுடன் தமிழ் ஈழ இராணுவத்தின் மாதகல் கிளையினரால் திருத்தப்பட்டு வருகின்றது.

## புதிய நூல்கள்

உடுவில், திங்கள்

பாடசாலை மாணவர்களுக்கு 1987ம் ஆண்டில் இலவச பாட நூல்களை வழங்குவது சம்பந்தமாக ஏற்ற நடவடிக்கைகளை கல்வி வெளியீட்டுத் திணைக்கள இலவச நூல் வெளியீட்டுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

1987ம் ஆண்டில் தற்போது நடைமுறையிலிருக்கும் நூல்களுக்குப் பதிலாக பல புதிய நூல்கள் வெளியிடப்படவிருக்கின்றன.

## செங்கல் பறிமுதல்

முல்லைத்தீவு, திங்கள்

ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையிலிருந்துமுல்லை இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்ட (இ.போ.ச) பழுது பார்க்கும் வாகனம் இனந்தெரியாத இளைஞர்களால் சோதனையிடப்பட்டது.

இவ்வேளை இதனுள்ளிருந்த செங்கல், இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்படுவதை சாரதி ஒப்புக்கொண்டதையடுத்து செங்கல்பறிமுதல் செய்யப்பட்டது.

## வித்தியாலயத்தை இரு நேரமாக்க கோரிக்கை

வேலணை, திங்கள்

வேலணை அரசினர் மத்திய மகா வித்தியாலயத்தை மீண்டும் இரு நேரப்பாடசாலையாக மாற்றியமைக்குமாறு வேலணை கொத்தணிப் பாடசாலை அதிபர்கள் வடமாநில கல்விப் பணிப்பாளரைக் கேட்டுள்ளனர்.

கடந்த சில மாதங்களாக ஒரு நேரப் பாடசாலையாக இயங்கி வந்த இவ் வித்தியாலயத்தின் மாணவர்களது கல்வி முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டே மேற்படி கொத்தணி அதிபர்கள் இக் கோரிக்கையை விடுத்துள்ளனர். (சி)

4 ஈழநாடு — தேசிய தினசரி Eelanadu National Thamil Daily — செவ்வாய்க்கிழமை 9—12—1986

மணிவாக்கு

சித்தமலம் அறுவித்துச்
சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக்கு அருளியவா(று)
ஆர்பெறுவார் அச்சோவே

—மாணிக்கவாசகர்

# நமது நோக்கு

## நாட்டை அச்சுறுத்தும் இரு பெரும் நோய்கள்

1983 இன் இனக்கலவரத்தில் நடந்தகொலைகள்பல இளைஞர்கள் - கல்லூரிமாணவர்களால் நடத்தப்பெற்றனவென்ற தகவல் ஆதாரமற்றதல்லவென்பது புலனாகின்றன.

வஞ்சகமற்ற வெள்ளை உள்ளங்கள் இந்தப் படுகொலைகளில் பங்குபற்றின வென்றால் அது சுயஉணர்வற்ற நிலையில் போதையின் தூண்டுதலென்று நம்பகரமான செய்திகள் குறிப்பிட்டிருந்தன.

அது அவ்வாறாக, இதயத்தை அதிர வைக்கும் கொலைகள் பல சாதாரண மனிதன் - காடைத்தனம் மிக்க எவனும் செய்யமுடியாத கொலைகள் இன்று எவ்வாறு அதிகரித்து வருகின்றன; இரட்டைக் கொலை, அண்மையில் மாதம்பையில் நடந்த கொலை - சோமாவதியும் அவருடைய பெருமக்கள் இருவரும் - இன்னும் பல பயங்கர கொலைகள் மிகச் சாதாரணமான காரணங்களால் திட்டமிடப்பட்டு நடைபெறுகின்றன.

கடந்த வருடம் வீதிவிபத்துக்களின் தொகை 35,000 என்று செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. பெரும்பாலும் மதுவின்சேட்டைக் குட்பட்ட வான் சாரதிகள் இவ்விதசாதனைகளைப் புரிகின்றனரென்று கணிக்கப்படுகிறது.

சுங்க இலாகாவின் அண்மையில் வெளிவந்த ஊழல் மோசடி, இந்த நாட்டை முற்றாக அழித்துவிடவல்ல போதைவஸ்து நாட்டுக்கூடாக மட்டுமல்ல நாட்டுக்குள்ளேயே வரும் வாய்ப்புடையதென்ற அச்சத்தை விளைக்கவல்லது.

வெல்லமுடியாது தத்தளிக்கும் அரசுக்குதவும் வகையில் பத்திரிகைகள் பஞ்சாப் விவகாரங்களில் மக்கள் கவனத்தை திசை திருப்பாது, நாட்டுக்குள் உலாவும் சத்துராதிகளை விரட்டி அடிக்கும் பணியில் இறங்கவேண்டும்.

வளர்ச்சியடைந்த நாடுகளை வேரறுக்க வல்ல மதுவும் போதையும் இலங்கை போன்ற வறியநாடுகளைப் பீடிக்குமானால், பௌத்த கலாசாரமும் புராதன நாகரிகமும் எக்கதிக்குள்ளாகுமென்பதை விளக்க வேண்டுமா?

சர்வதேச தொழில் ஸ்தாபனம் (I. L. O) அண்மையில் நடத்திய ஆய்வில், மதுவும் போதை வஸ்தும் தொழில் துறையில் உண்டாக்கிவரும் பெருநட்டம் பற்றிப் புள்ளி விபரங்கள் மூலம் விளக்கியிருக்கிறது.

தொழிலாளிகள் ஒழுங்கீனம், வேலைத்தலத்திற்குச் செல்லாமை, தேகாரோக்கியம் கெட்டநிலையில், மனநோய்க்குட்பட்ட நிலையில் விபத்திற்குப்பலியாகுதல், போன்ற கேடுதிகளால், தொழில் அபிவிருத்திதடைப்படுவதோடு மனிதமேம்பாடு குன்றிப் போவதால் சமுதாயத்துக் கேற்படும் நட்டம் மதிப்பிடமுடியாததென்று கருத்து வெளியிடப்பட்டிருக்கிறது.

மதுவால் குடும்பங்கள் மட்டுமல்ல, சில இடங்களில் வம்சமே தாக்கப்படுவதை நாம் காணமுடிகிறது.

மது விலக்குக்கு நம்முன்னோர் எடுத்த பிரயத்தனங்களின் பலனாக இந்தக் குடாநாட்டில் வாழும் மக்கள் நியாயமான அளவிற்கு தப்பி வாழமுடிகிறது. இருப்பினும் இன்றைய சமுதாய கட்டுப்பாடின்மை, கண்டிப்பு தளர்ச்சியடைந்த நிலை, "துானப்பேய்க்கு வரவேற்பளிக்க உகந்ததா?

மாணவ உலகத்தை இவ்விரு நோய்களும் பீடிக்குமானால் சமுதாயங்களும் நாடும் பேரழிவுக்குள்ளாகும்; அணு ஆயுதப்போர் உலகை அச்சுறுத்துகிறது; ஆனால் நாகரிக நாடுகளை - குறிப்பாக அமெரிக்காவைப் போதை குட்டிச்சுவராக்குமென்பதால் அதற்குரிய தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. எங்கள் நாட்டில், அதுவும் கிராமங்களில் உட்புகுமானால் நீக்க முடியாத அளவிற்கு நிலைத்து நின்று அழிவை நிறைவேற்றும்.

பங்களூர் சார்க் மாநாட்டில் போதையின் கேடு பற்றியும், அதன் கடத்தல் வியாபாரம் பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டது. அது குறிப்பாக இந்தியா வழியால் பாகிஸ்தான் கொண்டு செல்லப்படுவதைத் தடுக்கும் வழி பற்றிய விவாதம்.

பொன்முக்கோணமென்று குறிக்கப்பட்ட ஈரான், ஆப்கானிஸ்தான், கம்பூச்சியா வழி இன்றைய அரசியல் குழப்பங்களாகத் தடைப்பட்டிருக்கிறது. எனவே புதுவழிகள் பழக்கப்படுகின்றன.

இலங்கை அதில் அகப்படாதிருந்தாலும், இவ்விருநோய்களும் நாட்டிற்கு புதியதல்ல.

மரண தண்டனை, ஆயுள் பரியந்தம் சிறையென்ற சட்டம் சில நாடுகளில் அமுலாக்கப்படுகின்றன. அந்தப் போக்கில் மட்டும் நாம் போகாது இதனை முளையிலே கிள்ளவல்ல தடுப்பு மருந்தாகிய கல்விமுறை பலனளிக்கும். பாடசாலைகளில், ஆசிரியரும், சமூக நிறுவனங்களில் தொண்டர்களும், இவற்றை எதிர்த்து தீவிர பிரசாரம் செய்வது இன்றைய நிலையிலே மிக அவசரமான பணி.

எங்கள் குடாநாட்டைக் குறிப்பாகக் கொண்டால், நாட்டிற்கு முன்மாதிரியான தடுப்புச் சேவை, இரேட்ட பாடசாலைகளில் தொடங்க வேண்டும்.

ஜன சமூக நிலையங்கள் மட்டுமல்ல தொழிற் சங்கங்கள் இப்பணியில் ஈடுபடுவது அத்தியாவசியமென்றே கொள்ளவேண்டும்.

# மனித உரிமைகள் தினம் தமிழ் மக்களுக்கு கரிநாள்

நற்பிட்டிமுனையில் பாதுகாப்புப் படையினர் குறிப்பிட்ட தினத்தில் தேடுதல் நடத்தவோ, கைது செய்யவோவில்லை என்றும் பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்டோரைக் கொண்டே சவக்குழிகளைத் தோண்டுவித்து, பாதுகாப்பு படையினரால் சுட்டுக்கொலை செய்யப்பட்ட கைதிகள் அக்குழிகளில் புதைக்கப்பட்டார்களென்ற கூற்றில் எந்த விதமான உண்மையுமில்லை என்றும் சம்பந்தப்பட்ட இடத்தில் நடத்தப்பட்ட தேடுதலின் போது போது அதற்குரிய தடயங்கள் எதுவும் காணப்படவில்லை என்றும் தேசிய பாதுகாப்பு அமைச்சர் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டி ஒன்றில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றிற்கு விடை பகர்ந்திருப்பதை யிட்டு, தேசிய பாதுகாப்பு அமைச்சருக்கு 'காணமற் போனோர்' குறித்து தாம் எழுதியுள்ள கடிதத்தில் சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர்நாயகம் திரு. அயன் மாட்டின் பிரச்னை எழுப்பியுள்ளார்.

பத்திரிகைகளுக்கு பொய்யான தகவல் கொடுத்ததாகவும், வதந்திகளைப் பரப்பியதாகவும் கல்முனை பிரைஜை கள்குழுத் தலைவர் போல் நல்லநாயகத்தின் மீது குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் உயர்நீதிமன்ற நீதியரசரே சம்பந்தப்பட்ட தினத்தில் நற்பிட்டிமுனையில் பாதுகாப்புப் படையினர் தேடுதல் எதனையும் மேற்கொள்ளவோ, கைதுசெய்யவோவில்லை என்ற அரச தரப்புச் சட்டத்தரணியின் கூற்றினை நம்பமுடியாதெனக் குறிப்பிட்டிருப்பதை சர்வதேச மன்னிப்புச்சபையின் செயலாளர் நாயகம் தமது கடிதத்தில் சுட்டியுள்ளார்.

மேலும் சம்பந்தப்பட்ட தினத்தில் நற்பிட்டிமுனையில் பாதுகாப்புபடையினர் நடாத்திய தேடுதல் முயற்சியின் போது பலர் கைது செய்யப்பட்டு, பாதுகாப்புப் படையினரால் கொண்டுசெல்லப்பட்டதையும்,

சம்பந்தப்பட்ட நிகழ்வின் போது "காணமற்போனோரின்" பெற்றோருடன் குறிப்பிட்ட இடத்தில் தேடுதல் நடத்தச் சென்ற பொலிஸ்குழு ஒன்று அடையாளங் காணப்படாத சடலம் ஒன்றினையும் அடையாள அட்டை ஒன்றுடன் சேட் ஒன்றையும் கண்டதற்கும் கண்கண்ட சாட்சிகளின் வாக்குமூலங்கள் மேற்படி வழக்கில் பதியப்பட்டிருப்பதாகவும் மேற்படி அடையாள அட்டை சர்வதேச மன்னிப்புச் சபையின் 'காணமற்போனோர்' அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒருவரது பெயரைத் தாங்கியிருந்ததாகவும்,

மேற்படி வாக்கு மூலங்களைப் பொய்யானவை என நிரூபிக்கும் வாய்ப்பாக சம்பந்தப்பட்ட சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்வதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த அரசதரப்பு வழக்கறிஞர் தவறியிருப்பதையும் திரு. அயன் மாட்டின் தமது கடிதத்தில் பிட்டுக்காட்டியுள்ளார்.

'வேந்தன்'

ஐ. நா: பொதுச் சபைத் தீர்மானத்தின்படி 'காணமற் போனோர்' எங்குள்ளார்கள் என்பதைத் தெளிவுபடுத்துவதற்கு சர்வதேச சட்டத்தில் ஸ்ரீலங்காவுக்கு பொறுப்பு இருப்பதாகவும் 'காணமற் போனோர்' மீதான விசாரணைகளை மேற்கொள்வதற்கு சுதந்திரமானதும், பாரபட்சமற்றதுமான ஒரு அமைப்பை ஸ்ரீலங்கா அரசுநிறுவ வேண்டுமெனத் தமது மேற்படி கடிதத்தில் வித்துரைத்திருக்கும் சர்வதேச மன்னிப் சபையின் செயலாளர்நாயகம் திரு. அயன் மாட்டின், அத்தகைய அமைப்பு ஒன்று நிறுவப்படும்வரை கட்டாயத்தின் பேரில் அல்லது விழைவின்றி காணமற்போனோர் மீதான ஐ. நா. நடவடிக்கைக் குழுவை ஸ்ரீ லங்காவிற்கு வருகை புரியஅழைக்க வேண்டுமெனவும் பரிந்துரைத்துள்ளார்.

கட்டாயத்தின்பேரில் அல்லது விழைவின்றிக் காணமற் போனோர் குறித்து ஐயப்பாடுகள் எழுந்த சந்தர்ப்பங்களில் அநேக நாடுகள் கட்டாயத்தின் நிமித்தம் அல்லது விழைவின்றிக் காணமற் போனோர் மீதான ஐ. நா. நடவடிக்கைக் குழுவைத் தமது நாடுகளில் விசாரணைகளை மேற்கொள்ளுவதற்காக அழைத்திருப்பதாகவும் திரு. அயன்மாட்டின் தமது கடிதத்தில் உதாரணமாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் திரு. அயன் மாட்டின் தேசிய பாதுகாப்பு அமைச்சருக்கு எழுதியுள்ள மேற்படி சமீபத்திய கடிதம் ஸ்ரீ லங்காவில் காணமற்போனோரான 272 பேரும் எங்குள்ளார்கள் என்பதைத் தெளிவு படுத்துவதையே நோக்கமாகக் கொண்டது.

"காணமற் போனோரான, 272 பேர் குறித்த தகவல்களைப் பெறுவதற்காக நாளது வரை வீணாக அவர்களைத் தேடிக்கொண்டிருக்கும் உறவினர்களுக்கு சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகத்தின் மேற்படி கடிதம் அவர்களுடைய கவலையில் பெரும் ஆறுதலை அளிக்கும் என்பதில் ஐயம் இல்லை.

ஆயின் உள்நாட்டிலுள்ள பிரஜைகள் குழுக்கள் மனித உரிமை இயக்கங்கள் மகஜர்களைச் சமர்ப்பிப்பதற்கு மேலாக அது விடயத்தை தெளிவு படுத்த மேற்கொண்ட நேரடி நடவடிக்கைகள் ஏதும் உண்டா? தமிழ் பேசும் மக்கள் அனைவரும் சிறப்பாக மனித அடிப்படை ஜனநாயக உண்மைகளில் பசிதாகம் கொண்டோராகக் காண்பித்துக் கொள்ளும் வெகுஜன இயக்கங்கள் வெட்கத்தால் நாணித் தலைகுனிய வேண்டிய நிலை.

ஆகவே 'காணமற் போனோர்' 272 பேருக்கும் யாது நேர்ந்தது என்பதைத் தெளிவுபடுத்துவதற்காக கட்டாயத்தின் பேரில் அல்லது விழைவின்றிக் காணமற் போனோர் மீதான ஐ. நா நடவடிக்கைக் குழுவை ஸ்ரீலங்காவிற்கு அழைக்கும்படி கோரும் சர்வதேச மன்னிப்புச் சபைச் செயலாளர் நாயகம் திரு. அயன் மாட்டினின் வேண்டுகோளுக்கு அரசு இணங்க வேண்டுமென வலியுறுத்தி மேற்படி விடயத்துக்கு சர்வதேச கவனத்தினை ஈர்க்கும் எத்தனமாக எதிர்வரும் "ஐ. நா. மனித உரிமைகள் தினமான" 10-12-86ம் திகதி புதன் கிழமையைத் தமிழீழ மக்கள் கரிநாளாக அனுஷ்டிக்க வேண்டும். அத்துடன் தமது தாயகத்தை இழந்த நிலையில் தங்களது தாயகத்தை மீட்பதற்காகத் தாயகத்திற்கு வெளியில் இருந்து கொண்டு போராடிவரக்கூடிய பாலஸ்தீன விடுதலை இயக்கம் பெற்றுள்ள அதே சர்வதேச அங்கீகாரம் தமிழீழத் தாயகத்தைப் பறிகொடாது தாயகத்துக்குள்ளிருந்தே அதன் விடுதலைக்காக போராடி வரக்கூடிய தமிழீழப் போராளிகளுக்கும் கிடைப்பதற்கு மேற்படி கரிநாள் அனுட்டானம் உரிய முறையில் பயன்படல் வேண்டும்.

ஐ. நா: மனித உரிமைகள் கரிநாள் அனுட்டானம் சர்வதேச தொலைத்தொடர்பு சாதனங்கள் வாயிலாக உலகின் கவனத்தையும் கரிசனையையும் ஈர்ப்பதற்கு தொழில் நிறுத்தம், பாடசாலைகள் பகிஷ்கரிப்பு, போக்குவரவுத் தடை ஏதும் தேவைப்படா. வர்த்தக, கைத்தொழில், தொழில் நிலையக் கட்டிடங்கள், வாகனங்களில்கறுப்புக்கொடிகளைப் பறக்கவிட்டு தமிழ்ப் பேசும் மக்கள் ஒவ்வொருவரும் கறுப்புப் பட்டியணிந்தவர்களாக வழமையான தமது நாளாந்த பணிகளில் ஈடுபடுவதே செய்தி சர்வதேச தொலைத் தொடர்பு சாதனங்களுக்கு எட்டுமானதாக இருந்தால் போதுமானதாக இருக்கும்.

கைத்தொழில், வர்த்தக, தொழில் நிலையங்கள் மற்றும் வெகுஜன இயக்கங்கள் சமூக இயக்கங்கள் கறுப்புக் கொடிகளையும், கறுப்புப் பட்டிகளையும் தயாரித்து பொது மக்களுக்கு வழங்குவது கரிநாள் அனுட்டானத்துக்கு பெரிதும் உதவும்.

பிறர் கையை எதிர்பார்க்காது பொது மக்களும் தாமாகவே அவற்றைத் தயாரித்து உபயோகிப்பதே மேலானது.

# மக்கள் கருத்து

## வீதிச் சீர்கேடு

மானிப்பாய் பட்டின சபை எல்லைக்குட்பட்ட கனகசபை வீதி, லோட்டன் வீதி, அதிகார் செல்லமுத்து வீதி ஆகிய வீதிகள் குண்டும் குழியுமாக இருப்பதால் பாதசாரிகளும், வாகனம் ஓட்டுபவர்களும் பெரும் சிரமப்பட்டே இவ் வீதியில் பயணம் செய்ய வேண்டியுள்ளது.

மழைகாலங்களில் குழிகளில் வெள்ளம் தேங்கி நிற்பது மேலும் பெரும் சிரமத்தை ஏற்படுத்துகிறது.

நீண்ட காலமாக கவனிப்பாரற்று இருக்கும் இவ் வீதியைச் சம்பந்தப்பட்டவர்கள் கவனிப்பார்களா?

மா. சிறிதரன்

## சென். ஜோன்ஸ்அம்புலன்ஸ்

மாவிட்டபுரம், தெ.:

யாழ். மாவட்ட சென்ஜோன் அம்புலன்ஸ் படைப்பிரிவினால் நடத்தப்பட்ட போட்டிகளில் காங்கேசன்துறைத் தொகுதிக்கான முடிவுகள் வருமாறு;

பாடசாலை மட்டத்திலான போட்டி முதலாமிடம் கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயம்.

பொது மட்டத்திலான போட்டி: தாதிகள் பயிற்சி முதலாமிடம், தெல்லிப்பழை வெல்கம் சேவிசஸ் விளையாட்டுக் கழகம், இரண்டாமிடம்

[7ம் பக்கம் பார்க்க]

# “ ‘ஜெய்ப்பூர்கால்’ பொருத்தும் நிலையம் யாழ்நகரில் அமையும்”

யாழ்ப்பாணம், செவ்.

“கால்களை இழந்து ஊன மாகி நடமாட முடியாதவர் களுக்கு ஜெய்ப்பூர் கால்கள் பொருத்தி நடமாடவிடும் அரும் பெரும் பணியொன்றினை கொழும்பில் உள்ள ‘‘பிறண்ட் இன் நீட் சொஸைற்றி’’ போல் யாழ்ப்பாணத்திலும் அன்னையர் முன்னணியின் அநுசரணையுடன் ஜெய்ப்பூர் கால் பொருத்தும் நிலையம் ஒன்றை ஆரம்பிக்க உள்ளோம்.”

கொழும்பிலுள்ள ‘‘பிறிண்ட் இன் நீட் சொஸைற்றி’’ உறுப்பினரும், பிரபல சமூகசேவகியுமான திருமதி சொர்ணு பேடினற் தெரிவித்தார்.

யாழ். போதனு வைத்திய சாலை பணிப்பாளர் காரியாலயத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின், திருமதி சொர்ணு மேலும் தகவல் தருகையில் கூறிய தாவது!

‘‘நோறாட்’’ ஸ்தாபனத்தின் நிதி உதவியுடன் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ‘‘பிறின்ட் இன் நீட்சொஸைற்றி நடாத்தும் ஜெய்ப்பூர் செயற்கைக்கால் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டு பதினைந்து மாதங்களில் சுமார் 750க்கு மேற்பட்டோருக்கு ஜெய்ப்பூரில் செயற்கைகால் பொருத்தப் பட்டுள்ளது. மாதத்தில் ஆகக்குறைந்தது 50 பேருக்காவது செயற்கை கால் பொருத்தப்படுகிறது:

யாழ்ப்பாணத்தில் கால் இழந்த நிலையில் உள்ளவர்கள் இங்குவந்து செயற்கைக்கால் பொருத்தியுள்ளனர் இந்தவகையில் யாழ்: ஆஸ்பத்திரியில் கடமை புரியும் மருத்துவ ஊழியர்கள் பல உதவிகளை அளித்துள்ளார்கள். இதற்காக நான் அவர்களுக்கு நன்றி கூறுகிறேன்: யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவிருக்கும் இப்பயிற்சி நிலையத்திற்கு சுமார் மூன்று லட்ச ரூபா அளவில் தேவைப் படுகிறது. இதற்கு யாழ்ப்பாணத்து மக்கள் தாராளமாக உதவவேண்டும். இதற்கு உள்ளூர்பத்திரிகைகள் போதியளவு பிரசாரமும் செய்ய வேண்டும் என்றும் தெரிவித்தார்.

கொழும்பு பிறிண்ட் இன் நீட் சொஸைற்றியின் தலைவராக திருமதி போல் பெரோ இருந்து வருகிறார்.

## சுமுகமான முறையில் பரீட்சை

கிளிநொச்சி, திங்கள்

கிளிநொச்சியில் இராணுவ அச்சத்தின் மத்தியில் க.பொ.த.சாதாரண பரீட்சைகள் மிகவும் சுமுகமான முறையில் அசம்பாவிதமின்றி நடைபெற்று வருகின்றன.

இராணுவ முகாமிற்கு அண்மையில் இருக்கும் மகாவித்தியாலயப் பரீட்சார்த்திகள் ஜெயந்தி நகரிலுள்ள இந்து மகாவித்தியாலயத்திலும், புனித திரேசாள் மகளிர் கல்லூரி, கனிஷ்ட மகாவித்தியாலயம் ஆகியவற்றின் பரீட்சார்த்திகள் பரந்தன் இந்து மகாவித்தியாலயத்திலும்பரீட்சைகள் எழுதி வருகின்றனர்.

# தாபரிப்பு வழக்கில் கணவனுக்கு பிடிஆணை

பண்டத்தரிப்பு - திங்கள்

தாபரிப்பு வழக்கு ஒன்றின் விசாரணைக்கு சமூகமளிக்காத உரும்பராய் வாசிக்கு மாதகல் தமிழீழ நீதிமன்றம் பிடிஆணை அனுப்பியுள்ளது.

தமக்கும் தமது மூன்று பிள்ளைகளுக்கும் தமது கணவரிடமிருந்துதாபரிப்புப்பணம் பெற்றுத்தருமாறு கோரி மாதகலை சேர்ந்த இளம்பெண் ஒருவர் மாதகல் தமிழீழ நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்திருந்தார். இதுபற்றிய வழக்கு விசாரணைக்கு சமூகமளிக்குமாறு மூன்று தடைவைகள் உரும்பிராயைச் சேர்ந்த பிரஸ்தாப இளம்பெண்ணின் கணவருக்கு அறிவித்தல் அனுப்பியும் அவர் சமூகமளிக்காதநிலால் அவருக்கு பிடிஆணை அனுப்புவது என்று மேற்படி மன்றம் முடிவு செய்தது.

(எ)

## ஈழத்துச் சிதம்பரம் மணிவாசகர் விழா

யாழ்ப்பாணம்,செவ்.

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் மணிவாசகர் விழா எதிர்வரும் 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 3 தினங்கள் சிறப்பாக நடைபெறவுள்ளது.

கடந்த 36 ஆண்டுகளாக நடைபெற்று வரும் மணிவாசகர் விழாவில் இம்முறை ஆரம்ப நாள் நிகழ்ச்சிக்கு நல்லை ஆதீன முதல்வர் தலைமை தாங்கி சிறப்புரையுடன் ஆரம்பித்து வைப்பார். தொடர்ந்து நடைபெறும் விழாக்களில் சிறப்புச் சொற்பொழிவுகள் பண்ணிசை முதலியன இடம்பெறவுள்ளன.

இவ்விழாவின் ஆரம்ப நாள் மணிவாசகர் திருவுருவ ஊர்வலம் மணிமண்டபத்தில் ஆரம்பமாகிச் சடையாளி வைரவர் ஆலயத்தை அடைந்து பின்னர் மடத்துக்கரை அம்பாள் கோவிலில் விசேட பூசை வழிபாடு நடைபெற்று ஈழத்துச் சிதம்பரத்தை அடைந்து அங்கு விழா நிகழ்ச்சிகள் நடைபெறும்.

செண்ஜோன்

[4-ம் பக்கத் தொடர்ச்சி


மாணவ கிராம அபிவிருத்திச் சங்கம் மூன்றுமிடம் காங்கேசன் அம்புலன்ஸ் குழு.

அம்புலன்ஸ் சேவை: முதலாமிடம் காங்கேசன் சிமெந்து ஆலை, இரண்டாமிடம் காங்கேசன் அம்புலன்ஸ் குழு, மூன்றுமிடம் கீரிமலை நகுலேஸ்வரா சன சமூக நிலையம்,

[எ]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
மயில்வாகனம்
சிவநாதம்
(இலங்கைத் துறைமுக அதிகாரசபை,
திருகோணமலை)

ஆண்டவன் படைப்பு:
07-04-1947

ஆண்டவன் அழிப்பு:
19-11-1985

திதி: 09-12-1986

எமது குடும்பத்தின் குலவிளக்கே! உன் பிரிவால் துயருறும்; அன்பின் மனைவி, பிள்ளைகள், மாமன்மார், மாமிமார், சகோதரர்கள், சகோதரிகள், குஞ்சிஅம்மா, குஞ்சியையா, மைத்துனர் மார், மைத்துனிமார், உற்றார், உறவினர், நண்பர்கள். [C 6171]

## முதலாமாண்டு நினைவஞ்சலி



சி. தர்மகுலசிங்கம்
(ஈழநாடு மன்னார் நிருபர் ரயில் நிலைய வீதி, [illegible] பேசாலை)

உதயம்: 3-7-1948
அஸ்தமனம்: 6-12-1985
திதி: 9-12-1986

அன்புத் தெய்வமே! எம்மை விட்டுப் பிரிந்தாலும் தங்கள் நினைவுகள் எம்மை விட்டகலாது. ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மாமி, மைத்துன மைத்துனிகள், வாணியாறு அணை, தர்மபுரி மாவட்டம், தமிழ்நாடு: தாய், தந்தை, சகோதர சகோதரிகள், மைத்துனிகள், பெறுமக்கள், உற்றார், உறவினர்.

துறையா மூலை,
புலோலி: [C-6252]

## நிர்வாகிகள்

பூநகரி, திங்கள்

பூநகரி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவு சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெற்ற போது பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர் தலைவர்: மயா. வல்லிபுரம், துணைத்தலைவர்: திரு. க. சண்முகம், காரியதரிசி: திரு. க. நடராசா 6 பேர் நிர்வாக சபைக்கு தெரிவாகினர்:

## அகதிகளுக்கு அன்பளிப்பு

பண்டத்தரிப்பு, திங்

சில்லாலையில் தங்கியுள்ள திருகோணமலையைச் சேர்ந்த அகதிகளுக்கும் பலாலிப் பகுதியில் இருந்து அண்மையில் குடி பெயர்ந்து சில்லாலையில் தங்கியுள்ள அகதிகளுக்கும் பனிப்புலத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சுமார் மூவாயிரம் ரூபா பெறுமதியான ஐந்து அரிசி மூடைகளைப் பகிர்ந்து அளிப்பதற்காக சில்லாலை பங்குத் தந்தை அருட் திரு பி: இருதயதாஸ் அடிகளிடம் ஒப்படைத்துள்ளனர்:

## மர்ம மரணம்

சுன்னாகம், திங்கள்

சுன்னாகம் சூராவத்தையைச் சேர்ந்த எஸ். அப்புத்துரை [48 வயது] என்பவரின் சடலம் தோட்ட வெளியொன்றில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 5ம்திகதியன்று காலை தோட்டத்துக்குச் சென்று வருவதாகக் கூறிச் சென்றவர் மாலையில் வீடு வராததினால் வீட்டார் தேடிச் சென்ற பொழுது தோட்ட வெளியில் காயமெதுவுமின்றி மர்மமான முறையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்: (ஒ)

---

## அந்த அறுவரின் அஸ்தமனத்திற்கான

அன்புடையோரின்

# ஈராண்டு நினைவு அஞ்சலி



சி. சிவகுமாரன்
(புளை)



த. புவீந்திரன்
(தொல்புரம்)



க. சிவானந்தன்
(மூளாய்)



வி. தேவநாதன்
(தொல்புரம்)



சி. சிவராசா
(தொல்புரம்)




க. யோகீஸ்வரன்
(தொல்புரம்)

ஆருயிர் நண்பர்களே! தமிழ்ஈழத் தாயகத்தை வென்றெடுக்கப் புறப்பட்ட நாட்டவந்த குஞ்சுகளே! ஆறு வேங்கைக் குருளைகளே! எம்மோடு துணைநின்று வீரங்கொள் பிஞ்சுகளே! போர்க்களத்தில் நீவிர் உயிர்நீத்தால் எம்இதய தாகமதாம் எதிரிகளைக் களம்கண்டு நங்குலத்துப் பெருமைகளை புளகாங்கிதம் அடைவோம்-ஆனால் ஊருக்கும் ஆகாமல் பாருக்கும் ஆகாமல் உள்ளூர் உலுத்தர்கள் உமையழித்து விட்டனரே! ஈராண்டு கழிந்தாலும் எங்கள் இதயத்தில் இருக்கின்றீர் சாகவில்லை:

ஏனென்றால் புன்சிரிப்பும் எழில்முகமும் எமக்காக்கிக் கண்சிமிட்டிக் கதைசொல்லித் தெளிவான கொள்கையுடன் சரியான பாதையிலே சென்றீர் மறப்போமோ தியாகத்தின் சின்னங்களே! ஈராண்டுதான் என்ன நூறாண்டு ஆகட்டும் தொல்புரத்தில், மூளாயில் தூயதமிழ் ஆர்வம்-இங்கு தூங்கவில்லை என்பதற்குத் தூண்கள்நீர் ஆறுபேரும் தூயதமிழ் ஈழத் துடிப்போடு துடித்திறந்தீர் மாயுமோ வீரம்? மறையுமோ நுந்தாகம் உங்கள் இலட்சியம்தான் எங்கள் ஆயுதம் உங்கள் உணர்வே எங்கள் உணர்வு சாந்தி பெறுவீர் சாந்தி சாந்தி.

ஆருயிர் நண்பர்கள்.

மூளாய் தொல்புரம்: (C 6249)



யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினுல் அண்மையில், புதிய மத்தியஸ் தர்களை தெரிவு செய்வதற்கு நடைபெற்ற பரீட்சையின் ஆரம்பநாள் வைப வத்தில், யாழ்ப்பாணம் சென். பத்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண. மைக்கல் ஜோசப் குத்துவிளக்ேற்றி வைப்பதையும், மேற்படி சங்கத்தின் உத்தியோகஸ்தர்களையும், பரீட்சார்த்திகளையும் படங்களில் காணலாம். (படம்: 'தேவா')


BECON

(ஸ்ரீதர் சினிமா முன்பாக)

யாழ்ப்பாணம்.


A/L

| | | |
|---|---|---|
| பொருளியல் | - | திரு. வரதராஜன் |
| கணக்கியல் | - | திரு. மரியதாஸ் |
| வர்த்தகம் | - | திரு. ரட்ணம் |
| அளவையியல் | - | திரு. S. S. மனோகரன் |
| இந்து நாகரீகம் | - | திருமதி அருள்தங்கை |
| தமிழ் | - | திரு. நாகேஸ்வரன் |
| 88 A/L | - | புதன் 9 மணி. |
| 87 A/L | - | ,, 10 ,, |
| DAY CLASS | - | ,, 12 ,, |

ஆரம்பம்: 10-12-86 (புதன்)

(A 3230)


## சீரிய நோக்குடன் சேவையாற்றியவர்



வட்டுக்கோட்டைத் தொகுதியில் தொல்புரத்திலே பெரு மதிப்புப்பெற்று சீரிய நோக்குடன், முழு நேர சேவையாற்றிய இளைப்பாறிய புகையிரத நிலையப் பாதுகாவலர் இன்று நம்மிடையே இல்லை.

சாதிமத பேதங்களை முழுமூச்சாக எதிர்க்கும் அஞ்சா நெஞ்சு படைத்த இவர் ஏழை மக்கள் ஏற்றவும் போற்றவும் வாழ்ந்தார். எவரையும் வசீகரிக்கும் முக விலாசம், யாரையும் புண்படுத்தாத அக விலாசம் இவரை பொல்லார்க்கும், நல்லாராய். வாழ வைத்ததில் வியப்பில்லை. விடா முயற்சி, இரக்கசிந்தை, கள்ள மற்ற உள்ளம், தன்னடக்கம். விருந்தோம்பல், பெரியாரைக் கனம் பண்ணல் ஆகிய நற்பண்புகள் அமைந்த குணக்குன்று. இதனுல் இவர் மக்கள் உள்ளங்களில் நிறைந்து வாழ்ந்தார். இவர் ஆத்மீகத் துறையில் ஈடுபாடுடையவர். முருகன் திருநாமத்தையே தனது கரத்தில் இயற்கையாக வைத்துள்ளார் முருகனின் சிறப்பான நாளான கந்த சஷ்டி தினத்திலேயே அவரது ஆத்மா சாந்தி அடைந்தது. 1985ம் ஆண்டு புரட்டாதி மாதம் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுர். ஆனல் பொதுப் பணி அவர் ஓய்வைத் தடுத்தது. பொதுப் பணிக்குத் தன்னை அர்ப்பணித்தார்.

இளைப்பாறிய நாள் முதல் கடைசி நேரம்வரை ஈழநாட்டுக்கும், எமது கிராமத்திற்கும் செய்த சேவை எழுத்தில் அடங்காது.

இவருடைய இந்த அமரத்துவ நிலையே இவரின் சேவை, ஆற்றல், புண்ணியம். என்பன இவரைப் படுக்கையில் வைத்து அழுந்தாது சிவபதம் அளித்தது என்பதும் இவரே எமக்கெல்லாம் உதாரண புருஷராளுர் என்பதும் நம்பிக்கையாகும்.

எம். எஸ். சிவப்பிரகாசம்

## யாழ். பதில் நீதவான்

யாழ்ப்பாணம், செவ். சிரேஷ்ட சட்டத்தரணி ஏ. அன்ரனி நேற்றுமுதல் யாழ்ப்பாணம் பதில் நீதவாளுகக் கடமையாற்றுகிருர். (இ)

## யாழ். பல்கலைக்கழகத்தின் யாத்திரிகர்கள்மீது குண்டர்கள் தாக்குதல்

### அமைப்புக்குழு அறிக்கை

யாழ்ப்பாணம், செவ். மட்டுவில் மகாவித்தியாலயத்தில் தங்கியிருந்த பல்கலைக்கழக யாத்திரிகர்மீது கைத்துப்பாக்கிகள், கிறனேட்டுகளுடன் வந்த குண்டர்கள் கோஷ்டியொன்று தாக்குதல் நடத்தியதாக யாழ். பல்கலைக்கழக மாணவர் அமைப்புக் குழுவிடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இரவு 11 மணியளவில் பாடசாலையினுள் பிரவேசித்த 20-க்கு மேற்பட்ட குண்டர்கள், மின்விளக்குகளை நொறுக்கிவிட்டு டோர்ச்லைட் மூலம் யாத்திரிகரை தாக்கியதாகவும் பற்றைகளுக்குள்ளும், வீடுகளிலும் மறைந்திருந்ததினுல் தான் அவர்கள் உயிர் தப்பியதாகவும் இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. மேலும் தலையிலும் முகத்திலும், முதுகிலும் பலத்த காயங்களுடனிருந்த யாத்திரிகர் மறுநாள் காலை வைத்தியசாலையில் பொதுமக்களின் உதவியுடன் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அறிவித்துள்ள அமைப்புக்குழு, இக்குண்டர்களினுல் பாடசாலைச் சொத்துக்கள், யாத்திரிகரின் உடைமைகள், ஒலிபெருக்கி சாதனங்கள் ஆகியவை சூறையாடப்பட்டதாகவும் அறிவித்துள்ளது.

## மழையால் போக்குவரத்து ஸ்தம்பிதம்

கிளிநொச்சி, திங்கள். கிளிநொச்சியில் பெய்து வரும் மழைகாரணமாக இப்பகுதி வீதிகள் அனைத்தும் பலத்த சேதமடைந்துள்ளதால் பரந்தனுக்கு அப்பால் தூர இடங்களுக்கான சகலபோக்குவரத்தும் ஸ்தம்பிக்கும் அபாய கட்டத்தில் உள்ளது.

## வைக்கிங்ஸ் கழக புதுவருட நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், செவ். யாழ் வைக்கிங்ஸ் விளையாட்டுக் கழக வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை தற்காலிக தலைவர் ஆசிரியர் பி. சூசைப்பிள்ளை தலைமையில் சென் சாள்ஸ் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: ரி. குமார், தலைவர்: ஏ. ஐ. எல். குணநாயகம் (அதிபர் சென். சாள்ஸ் மகாவித்தியாலயம்), செயலாளர்: பி. ஆர். தம்பிநாயகம் உப-தலைவர்கள்: பி. சூசைப்பிள்ளை (ஆசிரியர்), ஏ. என். இராமநாதன், பொருளாளர்; ரி. ஐ. இறங்கநாயகம், உப-செயலாளர்: ரி. ஜே. பாலேந்திரன், விளையாட்டுச் செயலாளர்: இ. ஞானசீலன், நிர்வாக உறுப்பினர்கள்: ரி. ஆர். நித்திலநாயகம், சி. ஜெபாலன், ஏ. ஏ. சுரேந்திரன், ஜே. அமலதாஸ், ஏ. எஸ். ஜெயக்குமார், ஏ. லடிஸ்லோஸ். (வி)

## இன்றைய பலன்

மாதம்: கார்த்திகை
தகதி: 23 (4-12-86)
கிழமை: செவ்வாய்
நட்சத்திரம்: பூரட்டாதி
திதி: அட்டமி

மேடம்: வேண்டாத வினைகள் தோன்றும். முயற்சிக்கு முட்டுக்கட்டை தோன்றும், உடல் நலமும் பாதிக்கப்படலாம்.

இடபம்: தொழில் வெற்றியுண்டு. இல்லத்தில் இனிமை துள்ளும். மாதரூ வழியாலும் தனவரவுண்டு.

மிதுனம்: வாழ்க்கைத் தரம் உயரும். கடமையும் சிறக்கும். டாக்டர்களுக்குப் பொன்னான தினம்.

கடகம்: தொழில் குறித்த சிந்தனை உருவாகும். காதற் கலை தாக்கும். வரவிலும் தடைகள் பல உருவாகும்.

சிங்கம்: குடும்பம் சிறக்கும் கொடுக்கல் வாங்கல் பிணக்கு பறக்கும். புது வாழ்வும் பிறக்கும்.

கன்னி: துன்பம் உங்களைத் தொடரும். வாகனம் செலுத்துவோர் அவதானம் வேண்டும், கடமையிலும் சோர்வு தென்படும்.

துலாம்: பிதாவழிப் பெருமையுண்டு. நீண்டநாள் பிணியுமுண்டு. தன் தொழில் விருத்தியுமுண்டாம்.

விருச்சிகம்: கூட்டு வியாபாரத்தில் முன்னேற்றமுண்டு. செல்வாக்குப் பெருகும். குடும்பத்தில் மகிழ்வும் உண்டு

தனுசு: குடும்பத்தில் பிணைப்புக்கள் இறுகும். கலைஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள் தொழில் மகிழ்ச்சி உண்டு

மகரம்: கருடப் பார்வை வட்டமிடும் வைத்தித் செலவுமுண்டு. வீண் விவாதங்களும் இடம்பெறும். அவதானம்.

கும்பம்: பணத்தை இழக்க நேரிடும். தனி வழிப் பயணத்தைத் தவிர்க்கவும். எவ்விடத்திலும் விழிப்பு அவசியம்.

மீனம்: வாக்கு வசீகரத்தால் காரியத்தைச் சாதிப்பீர்கள். காதலர்கள் பூரிப்படைவர். அமைதியான வாழ்வு கிட்டும்.

திருமலை வே. ரவீந்திரன்


யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

## வழங்குநர்களையும், லொறிச்சேவை ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல்—1987

1. பின்வரும் மூலப் பொருட்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்துடன் தங்களைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், லொறிச் சேவை ஒப்பந்தக்காரர்கள் ஆகியோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல் - 1987" எனக் குறிப்பிட்டு பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய் என முகவரியிட்டு 24-12-86ம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்போ கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். இதற்குரிய விண்ணப்பப்படிவங்களை உரிய பணத்தைச் செலுத்தி சங்கக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

3. விண்ணப்பங்களுடன் கீழ்க்கண்ட மீளளிக்கப்படாத பதிவுப் பணங்களையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

4. சாதாரணமாக இச்சங்கத்தில் பதிவுசெய்து கொண்ட வழங்குநர்கள் ஒப்பந்தக்காரர்களிடம் இருந்தே கேள்விகள் கோரப்படும் எனினும் அவசியமேற்படின் ஏனைய வழங்குநர்களிடமிருந்தும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் கேள்விகள் கோரவும் கொள்வனவு செய்யவும் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்கு பூரண உரிமை உண்டு.

5. பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்களும், ஒப்பந்தக்காரர்களும் வேண்டப்படும்போது கேள்விகள் சமர்ப்பிக்கவோ அன்றேல் கட்டளை நிறைவேற்றவோ தவறும் பட்சத்தில் அல்லது பொருட்கள் விபரக்கூற்றுக்கு அல்லது மாதிரிக்கட்டு அமையாதவிடத்தும் குறித்த வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்களின் பெயர்கள் பதிவேட்டிலிருந்து நீக்கப்படுவதுடன் வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

| (அ) | மூலப் பொருட்கள் பற்றிய விபரம் | பதிவுக் கட்டணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| 1. | சோளம் | 100/- | 25/- |
| 2. | றபர் கொட்டைப் பிண்ணுக்கு | ,, | ,, |
| 3. | தேங்காய்ப் பிண்ணுக்கு | ,, | ,, |
| 4. | எள்ளுப் பிண்ணுக்கு | ,, | ,, |
| 5. | மீன் தூள் (50% புரதச்சத்து குறையாதது) | ,, | ,, |
| 6. | அரிசித் தவிடு | ,, | ,, |
| 7. | சிப்பி | ,, | ,, |
| 8. | பிறிமிக்ஸ் | ,, | ,, |
| 9. | கொக்குளோடியஸ்ரேற் | ,, | ,, |
| 10. | வியூரொசொலிடோன் | ,, | ,, |

(ஆ) லொறிச் சேவை

கொழும்பிலிருந்தும், ஏனைய மாவட்டங்களில் இருந்தும் எமது தொழிற்சாலைக்குத் தேவைப்படும் பொருள்களை ஏற்றி எம்மிடம் கையளிப்பதற்கு.

(இ) அச்சிடும் வேலைகள் செய்வதற்கு.

பொதுமுகாமையாளர்.

திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

[A-3304]

# காத்தான்குடி ஊர்காவற் படையினர் நிராயுதபாணிகளாக்கப்படவேண்டும்

மட்டக்களப்பு, திங். மட்டக்களப்பு மாவட்டத்தில், காத்தான்குடி, களுதாவளை ஆகிய இடங்களில் அப்பாவித்தமிழ்மக்கள் ஆயுதப்படையினராலும், ஊர்காவற்படையினராலும் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக மட்டு, அம்பாறை மாவட்டப் பிரஜைகள் குழுச் செயலாளர் நேற்று ஜனாதிபதிக்குத் தந்தியொன்றை அனுப்பியுள்ளார்.

அத்தந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

காத்தான்குடியில் கடந்த ஆறும் திகதி இ.போ.ச ஊழியர்கள் பத்துப்பேரும் பொதுமக்கள் இருவரும் கொல்லப்பட்டனர். ஐந்தாந்திகதி களுதாவளையில் நால்வர் கொல்லப்பட்டனர்.

இம்மாதிரியான படுகொலைகள் எதிர்காலத்தில் நடைபெறாமல் இருக்கத்தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். காத்தான்குடி ஊர்காவற்படையினர் நிராயுத பாணிகளாக்கப்படவேண்டும். இச்சம்பவங்கள் தொடர்பாக நீதிவிசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டு பாரபட்சமற்ற விசாரணைகள் நடாத்தப்படவேண்டும். (கே)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. ஆறுமுகம் பாலசிங்கம்

மலர்வு: 29 - 12 - 42

அரக்கர் அழிப்பு: 02-12-84

திதி: 9-12-86 செவ்வாய்

பிறந்த இடம்: தெல்லிப்பழை வீமன்காமம் புகுந்த இடம்! ஏழாலை வடக்கு

வாழ்ந்தஇடம்: நெடுங்கேணி பட்டிக்குடியிருப்பு.

எதிதுணையும் பேதமுறாது, எவ்வுயிருந் தம்முயிர்போல் எண்ணி, உத்தமன் என்ற பேர்பட உயர்ந்தோர் போற்றிசைப்ப, திருவருள் நலத்தால் நல்வாழ்வு வாழ்ந்து வந்த தங்கள் உயிரைக் கருணையிலா ஆட்சியாளர் கவர்ந்த இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலித் திதி நாளாகிய இன்று [கார்த்திகை வளர்பிறை நவமி], நடைபெறும் சிரார்த்த கிரியைகளாலும், மோட்ச அர்ச்சனைகளாலும் தங்கள் ஆன்மாசாந்தி பெற்றுப் பெருமான் பெருவடியில் நயந்திருக்கப் பிரார்த்திக்கின்றோம். "கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக அருள் நயந்த சன்மார்க்கர் ஆட்சி மிளிர்க" சாந்தி இப்படிக்கு. நீக்கமற நினைந்துருகிப் பிரார்த்திக்கும் மனைவி சரஸ்வதி, மழலைகள், சிவயாழினி, திருமாறன்.

"திருஏரகம்" ஏழாலை வடக்கு, ஏழாலை.

C-6264

லிடோ
10-30, 2-30, 4-30, 6-30
BOLERO
(Strictly for Adults and Colour)

வெலிங்டன் திரையில்
10-30, 2-30, 6-30
M. G. R. -ஜெயலலிதா. அசோகன், மனோகர், சோ, சௌகார்ஜானகி
நடித்த
ஒளிவிளக்கு
12 முதல்
TOO HOT TO HANDLE
(Adults only)

## தமிழர், சிங்களவர்---

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

ஷ்டவசமாகத் தமிழ்க் குழுக்களிடையே வேறுபாடுகள் இருந்தாலும்கூட 'தமிழர் தாயகம்' என்ற கோட்பாட்டில் எம்மிடையே முழு ஒற்றுமை உண்டு."

### இனங்களிடையே அமைதி நிலவுமா?

இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று காணப்பட்டவுடன் தமிழ் மக்களுக்கும், சிங்கள மக்களுக்குமிடையில் சமாதானமும் நல்லுறவும் நிலவுமா என்ற கேள்விக்கு பிரபா பதிலளிக்கையில், "இரு இனங்களும் ஒன்றாக வாழ்வது கிட்டத்தட்ட இயலாத காரியமாகும்.

"இனப் பிரச்சினைக்கு அரசியற் தீர்வொன்று காணப்பட்டு இரு இன மக்களும் ஒற்றுமையாக வாழ்வரெனத் திரு ஜெயவர்த்தன நம்புகின்றாரெனில், ஏன் அவர் இன்னமும் தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களைத் தொடர்கின்றார்? தமிழர் வாழும் வடக்குக் கிழக்குப் பகுதிகளை ஏன் அவர் தனியாக விடுகின்றாரில்லை? அவருக்குத் தெரியும் இப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வொன்று காணப்படமுடியாது ஈழமே முடிவாக இருக்குமென்று. ஆகவே இத்தகையதொரு நிலையில் அவர் தனது குடியேற்றத் திட்டங்கள்மூலம் எவ்வளவுக்கெவ்வளவு முடியுமோ அந்தளவு தமிழர் நிலங்களைப் பறிக்க முயல்கின்றார்.

"ஒரு சில முஸ்லிம்களைத் தவிர ஏனைய முஸ்லிம்கள் எம்முடனேயே உள்ளனர். முஸ்லிம்களும் தமிழர்களே. எமது இயக்கத்திலும் ஏனைய இயக்கங்களிலும் பல முஸ்லிம் இளைஞர்கள் உள்ளனர். முஸ்லிம் மக்கள் தமிழருடன் ஒன்றிணையாவிட்டால் அவர்களே பலவீனமடைந்துவிடுவர்.

### மலையகத் தமிழர் வடக்கு வரவேண்டும்

"மலையக மக்களைப் பொறுத்தவரையில் அவர்களும் வடக்கு நோக்கி வரவேண்டும் என்பது எனது கருத்து அவர்களுக்குப் புனர்வாழ்வளிக்க எம்மிடம் திட்டங்கள் உள்ளன. அவர்களும் வடக்கிற்கு வந்துவிட்டால் ஒரு தனித் தமிழ் மாநிலமாக இருப்பதுடன் நாமும் பாதுகாக்கப்படுவோம்.

"இலங்கை அரசின் படைகளுடன் முழு அளவிலான யுத்தமொன்றை நடத்துவதுபற்றி நாம் பேசமுடியாது. ஏனெனில் நமது போராட்டத்தின் தன்மையும், எமதுசுற்றாடலும் அத்தகையது. போராட்டம் நீண்டதாக இருக்கும். ஆனால் அது ஒரு முடிவைத்தரும். அம்முடிவு எமக்குச் சாதகமாக இருக்கும்" என்று கூறினார்.

### சத்தியாக்கிரகப் போராட்டம்பற்றி

"புதுடில்லி, தமிழக அரசுகளினால் நெருக்கடி நிலைக்குத் தள்ளப்படும் போதெல்லாம் சத்தியாக்கிரகப் போராட்டம் [உண்ணாவிரதம்] நடத்தப்படுமா என்ற கேள்விக்கு 'பிரபா' பதிலளிக்கையில், "இத்தகைய எதிர்ப்புமுறையினால் சகல இயக்கங்களினதும் தொடர்பு சாதனங்களைப் மீட்டுப் பெற வகை செய்துள்ளேன். அத்துடன் நாம் கடுமைப் போக்குடைய கெரில்லாவீரர்களாக மட்டுமிருக்கவில்லை என்பதை அனைவருக்கும் காட்டியுள்ளேன், எமதுமக்களுக்குப் பாதகமான தீர்வை ஏற்றுக்கொள்ளுமாறு இந்திய அரசுகள் என்னை நிர்ப்பந்தித்தால் நிச்சயமாக இந்த காந்தீயப் போராட்டத்தில் குதிப்பேன் எனது மக்களுக்காகச் சாகநான் தயாராயுள்ளேன். ஆனால் உண்ணாவிரதமிருப்பதன் மூலம் காலனை இங்குள்ளோர் பார்க்க விரும்பமாட்டார்கள் என நினைக்கின்றேன்" எனக் கூறினார். [ஊ]

## பிற்போக்கு---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சமசமாஜக்கட்சியின் யாழ்: கிளையும், வடபிரரந்திய ஐக்கிய தொழிலாளர் சம்மேளனமும் இணைந்து கையளித்த கடிதமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது!

"மாகாண சபைகள் அமைக்கவேண்டும் என்ற தீர்மானம் ராஜீவ், எம். ஜி. ஆர். மற்றும் ஏனையோரின் உதவியுடன் முன்வைக்கப்படும் ஏமாற்றுவித்தையாகும். இந்த நாடகம் முழுவதும் இப்பொழுது அம்பலப்படுத்தப்பட்டுள்ளது: தேசிய இனப் பிரச்சினையையோ, அல்லது இந்தநாட்டின் சிக்கலான பொருளாதார பிரச்சினைகளையோ தீர்த்து வைப்பதற்கு இந்த அரசாங்கத்திடம் திறமையோ, நேர்மையோ இல்லை.

நாம் இந்த பிற்போக்கு அரசாங்கத்தை தூக்கியெறிவதற்கு ஒன்றிணைந்து இறுதி வரைபோராட வேண்டும். நவசமசமாஜக் கட்சியையும் ஏனையதொழிலாளிவர்க்க சக்திகளையும் ஒரு பொது அணியில் இணைப்பதற்கு தங்கள் கட்சி முழுப்பங்களிப்பையும் செலுத்த வேண்டும்.

## ஜனாதிபதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

த்தை நடத்தினர். இப்பேச்சுவார்த்தையின் விபரமெதுவும் வெளியிடப்படவில்லை.

இலங்கை விஞ்ஞான முன்னேற்ற ஒன்றியத்தின் 42-வது வருடாந்த விழா நேற்றுப் பிற்பகல் 6 மணிக்கு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவை ஜனாதிபதி ஜெயவர்த்தன பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு ஆரம்பித்துவைத்தார்.

தேநீர் இடைவேளையின் போது தனியறை ஒன்றுக்குச் சென்ற ஜனாதிபதி அங்கு சமூகமளித்திருந்த இந்திய உயர் ஸ்தானிகர் ஜே. என். டிக்ஷித்தைச் சந்திக்குமாறு அழைப்பு விடுத்திருந்தார். இவ்விருவரும் 15 நிமிடங்கள் பேச்சுவார்த்தை நடத்தினர். [கே]

# "ஊர் பாதுகாவலை பலப்படுத்தவும்"- ரிஷ்வி

மட்டக்களப்பு, திங்கள் காத்தான்குடியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற அசம்பாவித சம்பவங்களை நேரில் கண்டறிய மட்டக்களப்பு 2வது எம். பி. ரிஷ்வி சின்ன லெப்பே ஞாயிற்றுக்கிழமை கொழும்பிலிருந்து விசேஷ ஹெலிகொப்டர்மூலம் காத்தான்குடிவந்துசேர்ந்தார்.

இங்குவந்த சின்னலெப்பே எம். பி. பொதுமக்களையும், ஊர்காவல்படையினரையும் நடைபெற்ற சம்பவம் தொடர்பாக விசாரித்த பின்னர் மீண்டு கொழும்பு திரும்பினார்.

கொழும்பு திரும்பிய அவர் அரசாங்க உயர்மட்ட அதிகாரிகளைச் சந்தித்து நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக விளக்கிக் கூறினார். இதேவேளை காத்தான்குடியில் ஊர்பாதுகாவலைப் பலப்படுத்துவதற்கான வழிவகைகளை மேற்கொள்ளுமாறு அவ்வுத்தியோகத்தர்களை கோரியதாகவும் தெரிய வருகிறது.

## வடபகுதி---

[1ம் பக்கத் தொடர்ச்சி

படும். இதற்கென ஆறு புதிய பஸ்கள் அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும்.

வெளிநாடுகளுக்குச் செல்லவுள்ளோர் தமது நகைகளை மக்கள் வங்கிகளில் அடகு வைத்திருந்தால் அவைகளை அவர்களுக்குத் திருப்பிக் கொடுப்பதற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இதுவரை காலமும் ஒரு மணித்தியாலம்மட்டும் திறந்திருக்கும் வவனியா மக்கள் வங்கி பொதுமக்களின் வசதி குறித்துமூன்றுமணித்தியாலங்களுக்குத்திறந்துவைக்கப்படும்.

பொதுமக்களால் செய்யப்படும் முறைப்பாடுகளை விசாரிக்கவும், அவர்களை நேரில் சந்தித்து உரையாடவும் வன்னி ஆயுதப்படை முகாமைச்சேர்ந்த கேர்ணல் ரத்னயக்கா முகாமுக்கு வெளியில் வந்துஇருப்பார். ஆயுதப்படையினரால் கைது செய்யப்படும் பொதுமக்கள் துன்புறுத்தப்படுகின்றார்களா என்பதையும் அவர் கவனிப்பார்.

வன்னி மாவட்டத்திலிருந்து கைது செய்யப்பட்டு பூஸா தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களை அவர்களது உறவினர்கள் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் சென்று பார்ப்பதற்கு அனுமதி வழங்கப்படும் இவர்கள் அரசாங்க அதிபரின் கடிதத்துடன் இம்முகாமுக்கு சென்று தமது இளைஞர்களுடன் அரை மணித்தியாலம் கதைப்பதற்கு ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். இதுவரை இவர்கள் ஐந்து நிமிடம் மாத்திரமே பேசுவதற்கு வசதியளிக்கப்பட்டிருந்தது. [கே]

## கைது---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னகே என்பவரே கைதுசெய்யப்பட்டவராவார். அத்துடன் இவர் அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரும் குழுவின் அங்கத்தவர்களில் ஒருவருமாவார்.

வயிற்றில் சத்திரசிகிச்சை செய்து சில நாட்களிலேயே இவர் கைதுசெய்யப்பட்டார் பின்னர் ஸ்ரீஜயவர்த்தன ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்ட இவர் இப்போது மீண்டும் கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

முன்னதாக புலனாய்வுத் துறையினரால் விசாரணை செய்யப்பட்டபோதே இவருக்கு எலிகடித்ததாம்.

### இந்திய கல்விமான்கள் எதிர்ப்பு

இதேவேளைசெல்வி லியனகே கைதுசெய்யப்பட்டதற்கு இலங்கையிலிருந்து பல மகளிர் ஸ்தாபனங்களும் பல இந்தியப் பல்கலைக்கழகங்களில் கடமையாற்றும் கல்விமான்களும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர் இந்த இந்திய கல்வி மான்கள் இலங்கை அரசாங்கத்துக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் செல்வி லியனகேவிடுதலை செய்யப்பட வேண்டுமெனக் கோரியுள்ளனர். [ஊ]

## தமிழ் மக்களுக்கு மிரட்டல்

[மட்டக்களப்பு]

காத்தான்குடியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற சம்பவங்களையடுத்து இக்கிராமத்துக்கு அடுத்துள்ள மஞ்சந்தொடுவாயில் வசிக்கும் தமிழ் மக்கள் அடிக்கடி மிரட்டப்பட்டு வருகின்றனர். இதன் காரணமா இக் கிராமத்து மக்கள் அநேகர் அயற் கிராமங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

## ஞாபகச் சின்னம்

கோப்பாய் திங்கள் கடந்தவருடம் சுதுமலை இராணுவத் தாக்குதலில் மரணமடைந்த விடுதலைப்புலி மேஜர் அல்பேட் (ரூபன்)க்கு அச்சுவேலியில் ஞாபகச் சின்னம் அமைக்கும்வேலை மும்முரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அச்சுவேலி - சங்கானை வீதிச் சந்தியில் இந்த ஞாபகச் சின்னம் அமைக்கப்படவுள்ளது.

## கடுழிய சிறைத்தண்டனை

கொழும்பு, திங்

ஹிரோயின் போதை வஸ்து வைத்திருந்த இளைஞர் ஒருவருக்கு கொழும்பு நீதிமன்றம 15 வருடகால கடுழியசிறைத் தண்டனை வழங்கியுள்ளது.

கொம்பனித் தெருவைச் சேர்ந்த இந்த முஸ்லிம இளைஞர் 1.9 கிறாம் ஹிரோயினுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். (ரா)

## ஒரேமுறையில் 4 கன்றுகள்

முல்லைத்தீவு, திங்கள் முள்ளியவளை நீராவிப்பிட்டியில் எம். எம். யூசுப் என்பவருடைய பசுமாடு ஒன்று நான்கு கன்றுகளை ஈன்றது.

இக்கன்றுகள் யாவும் சுகமே உள்ளன பெருந்தொகையான மக்கள் இக்கன்றுகளைப் பார்வையிட்டுவருகின்றனர்.

## புத்தக வெளியீடு

யாழ்ப்பாணம், செவ்

திரு. செல்லப்பா நடராஜா எழுதிய "எனது நோக்கில் இலங்கைப் பாராளுமன்றம்" என்னும் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 15 ம் திகதி திங்கட்கிழமை கொழும்பு தமிழ் சங்க மண்டபத்தில் திரு. து. தருமராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

அமைச்சர் எஸ். தொண்டமான் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளும் இவ்விழாவில் தினகரன் பிரதம ஆசிரியர் திரு. இ. சிவகுருநாதன் வெளியீட்டுரையையும், வீரகேசரி பிரதம ஆசிரியர் திரு ஆ. சிவநேசச்செல்வன் ஆய்வுரையையும் நடத்துவர். (ரா)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
9-12-8 செவ்வாய்க்கிழமை

# "குருதியுறைந்த நம் தேசத்தில் குண்டர்களின் அடக்குமுறை"

## யாழ். பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்குழு

யாழ்ப்பாணம், செவ்வாய் ''சிறிலங்கா அரசுதான் இது வரைக்கும் குண்டர்களைப் பாவித்துப் போராட்டத்தை அடக்க முற்பட்டது. ஆனால் இன்று தியாகிகளின் குருதி யுறைந்த நம் தேசத்து மண்ணிலே அந்த அணுகுமுறையில் அடக்குமுறை தொடர்கிறது. இந்தக் குண்டர்களை யார் உருவாக்குகிறார்கள்? உண்மைக்கு மேடையோ, அல்லது வெளிச்சமோ போட்டுக் காட்டவேண்டிய தேவையில்லை''.

மட்டுவில் மகா வித்தியாலயம், இருபாலை ஆகிய இடங்களில் பாத யாத்திரிகர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் குறித்து யாழ் பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்குழு விடுத்துள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மாணவனின் நிலை கவலைக்கிடம்

அந்த அறிக்கையில் மேலும், ''மட்டுவில் மகா வித்தியாலயத்தில் பாத யாத்திரிகர்கள் மீது நடைபெற்ற தாக்குதலில் காயமுற்ற நான்கு மாணவர்களில் எஸ் சந்திரகுமார் (உயிரியல் பீடம் 2-ம் வருடம்) என்பவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

''மட்டுவிலில் நடைபெற்ற இந்தத் தாக்குதலில் இருபதாயிரம் ரூபாவிற்கும் மேற்பட்ட பாடசாலைச் சொத்துக்களும், ஒலிபெருக்கிக் கருவிகளும், மாணவர் உடைமைகளும் சேதமாக்கப்பட்டன'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இருபாலையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து நாளை மறுதினம் வியாழக்கிழமை மாபெரும் கண்டனப் பொதுக் கூட்டமொன்றினைக் கோப்பாயில் நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரா)

## உணவு முத்திரை

வல்வெட்டித்துறை, திங் வல்வெட்டித்துறைப் பகுதி கடற்றொழிலாளர்களுக்கு இது வரை 6500 உணவுமுத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன. இவை முறையே வல்வெட்டித்துறை கிராமசேவகர்பிரிவு 3400, பொலிகண்டிப்பிரிவு 1500, தொண்டமனாறுப்பிரிவு 1600 ஆகும்.

## சைக்கிள் கள்வன் அகப்பட்டான்

கோப்பாய், திங்கள் சைக்கிளைத் திருடியவன் அதன் உதிரிப்பாகங்களை மாற்றும் வேளையில் இருந்தபோது வகையாக மாட்டிக்கொண்டான்.

அச்சுவேலியைச் சேர்ந்த மயிலு சிவராசதுரை என்பவரே இவ்வாறு விடுதலைப் புலிகளிடம் மாட்டிக்கொண்டவராவார். இதனைத் தொடர்ந்து இவர் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். (ரா)

## "ஜனநாயக அடிப்படை உரிமைகளுக்கு பாதுகாப்பு வேண்டும்"

### ஈரோஸ் அறிக்கை

யாழ்ப்பாணம், செவ் ''காணாமற்போன விஜிதரனை கண்டுபிடிக்கத்தவிக்கும் பல்கலைக்கழக மாணவர்களின் கவலையை உணர்ந்துகொள்ளாமல் அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்கு விடுக்கப்பட்டு வரும் சவாலைக் கண்டு கொள்ளாமல், நிராயுதபாணிகளாகப் போராடிவரும் மாணவர்கள் மீது தொடுக்கப்படும்தாக்குதல்கள் எமது மக்களின் பண்பாடு, கலாசாரம் போன்ற பாரம்பரிய பெருமைகளுக்கே கேடு விளைவிப்பதாகும்''

பல்கலைக்கழக மாணவர்களின் பாதயாத்திரை மட்டுவில், இருபாலை ஆகிய இடங்களில் தாக்கப்பட்டது தொடர்பாக ''ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற தலைப்பில் ஈழப்புரட்சி அமைப்பு (ஈரோஸ்) விடுத்துள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்மேலும்: பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்ந்து நடாத்திய பாத யாத்திரை பல்வேறு இடங்களிலும் குழப்பப்பட்டு வருவது வேதனைக்குரியது. மட்டுவிலிலும், தீவுப்பகுதியிலும், கரவெட்டியிலும் 7-12-86-ல் கட்டப்பிராயிலும் நடந்த சம்பவங்கள் மனிதநேயத்தையும், விடுதலையையும் விரும்பும் சகலராலும் கண்டிக்கப்படல் வேண்டும்.

பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் காணமற்போனதையிட்டு போராட்டங்கள் தொடர்ந்து வருவதும் போராட்ட அமைப்புக்கள் ஆதரவளித்து வருவதும் தெரிந்ததே. ஆனால் ''இனந் தெரியாத நபர்'' களின் செயற்பாடுகளினால் மாணவர்கள் கொடூரமாகத் தாக்கப்பட்டது கண்டனத்திற்குரியதாகும்.

மேலும் பேச்சுவார்த்தை நெருக்கடிகள் ஒருபுறமும், இராணுவக் கெடுபிடிகள் மறுபுறமாக உந்தித் தள்ளிவரும் இன்றைய சூழ்நிலையில் ஆபத்தை உணர்ந்து இயக்க மோதல்கள் ஏற்படுவது தவிர்க்கப்படல் வேண்டும். வரலாற்றைத் தீர்மானிக்கும் சக்தி மக்களுக்கே மக்களுக்கு மட்டுமே உரியது என்பதைக் கவனத்தில் எடுத்து மக்களின் அடிப்படைஜனநாயக உரிமைகளைப் பேணிக்காத்து மக்களின் எண்ண வேட்கைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய தேவையும் விடுதலைக்குப் போராடும் அமைப்புக்களின் கடமை என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரா)

## உதவி முகாமையாளர் கைது

கொழும்பு, திங் திருமலை இலங்கை வங்கிக் கிளையின் உதவி முகாமையாளர் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். கடந்த சனிக்கிழமை இவர் கைதுசெய்யப்பட்டார்.

தமிழ்த் தீவிரவாதிகளுக்கு உதவினார் என்ற குற்றச் சாட்டிலேயே இவர் கைது செய்யப்பட்டதாக தகவல் நிலையம் அறிவித்துள்ளது. [ஊ]

## இலங்கை 504/4 சிதத் 227

சென்னை டிச. 8 இலங்கை இந்திய அணிகளிடையே குவாலியரில் நடைபெற்றுவரும் இந்திய உபகுழுவுடனான 3 நாள் கிரிக்கெட் போட்டியின் 2-ம் நாள் ஆட்டத்தின் போது இலங்கை ஆரம்ப துடுப்பாட்ட வீரர் சிதத்வெட்டிமுனி திறமையாக ஆடி 227 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார். இது இவரது முதலாவது இரட்டைச் செஞ்சறியாகும்.

ஸ்கோர் விபரம் இலங்கை 4 விக்கெட் நஷ்டத்துக்கு 504 ஓட்டங்கள்; வெட்டிமுனி 229 டுலிப் மெண்டிஸ் 65 இந்திய உபகுழு 1 விக்கெட் நஷ்டத்துக்கு 80 ஓட்டங்கள் [ஸ்ரீகார்த் 29] (ஊ)

## "பயங்கரவாதத்துக்கு இறுதிமுடிவு எடுக்கவே நான் அமெரிக்கா செல்கிறேன்"

[கொழும்பு; ''பயங்கரவாதத்திற்கு இறுதிமுடிவு எடுக்குமுகமாக நான் அமெரிக்கா செல்கிறேன். ஆயுதவிற்பனை பற்றி பேசுவதற்குநான் அங்குசெல்லவில்லை. அத்துடன் இனப் பிரச்னைக்கு அரசியல்தீர்வு காண்பதற்காக நான் அங்கு செல்லவில்லை. ஏனெனில் இதற்கான ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ளாத நிலையில் தீவிரவாதிகள் உள்ளனர். அந்த ஆலோசனைகளை தீவிரவாதிகள் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் இந்தியஅரசு ஏற்றுக்கொண்டு பாராட்டி உள்ளது

இவ்வாறு அமெரிக்கா செல்வதற்குமுன் கடந்த சனிக்கிழமை தொம்பேயில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசிய அமைச்சர் லலித் அத்துலத்முதலி கூறினார்.

அவர்அங்கு மேலும் கூறியதாவது:

இந்திய அமைச்சர் குழுவுக்கும், இலங்கை அரசுக்குமிடையிலான பேச்சுவார்த்தை எதிர்வரும் 17 ம் திகதி நடைபெறவுள்ளது. இப்பேச்சுவார்த்தைகள் மிகவும் முக்கியமானவையாக இருக்கும். தவறான பிரசாரங்கள்மூலம் தீவிரவாதிகளுக்குக் கிடைத்துவரும் உதவிகளை என்னால் தடுத்து நிறுத்த முடியும். இதைநான் செய்வேன்.

நான் அமெரிக்காவில் தங்கி இருக்கும்போது சர்வதேச ஜூரர் சபை, சர்வதேச மன்னிப்பு சபை, மனித உரிமைகள் இயக்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளையும் சந்தித்து இங்குள்ள நிலைமைபற்றி எடுத்துக்கூறுவேன். (கே)

## இரு கப்பல்கள்

புங்குடுதீவு, திங்கள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் திடீர் என நயினாதீவு பக்கமாக இருந்து வந்த ஹெலிகொப்டர் ஒன்று ஊர்மனைகளின் ஊடாக பேரிரச்சலுடன் தாழப்பறந்தது.

இதனால் இப்பகுதி மக்கள் பெரும் திகிலுக்குள்ளாகி பதற்றமடைந்தனர்.

இதேவேளை புங்குடுதீவுக்கு தெற்குப்பக்கமாக கடற்படையினரின் பாரிய இருகப்பல்கள் நங்கூரமிட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (ரா

## கடற் கண்ணி வெடிக்கு படகு முற்றாக சேதம்

### தமிழ் ஈழ ராணுவம் அறிக்கை

யாழ்ப்பாணம், செவ்வாய் ஊர்காவற்றுறை, ஊறாண்டி கடற்கரைப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த காரைநகர் கடற்படைக்கு சொந்தமான படகொன்று தமது வீரர்கள் நடத்திய கடற்கண்ணிவெடித் தாக்குதலினால் முற்றாக சிதைவுற்றதாக தமிழ் ஈழ ராணுவம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் இதனைதொடர்ந்து காரைநகர் முகாமிலிருந்து ஷெல் தாக்குதல்களும் துப்பாக்கிப் பிரயோகங்களும் நடத்தப்பட்டதாகவும் அதனை தமது வீரர்கள் பதில்தாக்குதல்கள் மூலம் முறியடித்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ரா)

## மரண அறிவித்தல்

### மேரி யோசவ்

திருவாளர் மேரி யோசவ் ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னார் வயலாவின் அன்புக் கணவரும், சகுந்தலா, கமலா, விமலா, நிர்மலா ஆகியோரின் அன்புத் தந்தையும், நடராஜன், மறியோ ஆகியோரின் அன்பு மாமனும், செல்வி, சவிதா, வனிதா, நீரூ, நிக்காடோ ஆகியோரின் அன்புப்பேரனுமாவார். மரணச் சடங்கு பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

கரம்பன், ஊர்காவற்றுறை. (C-6260)

### திருமதி ஞானேஸ்வரி ராசரெத்தினம்

வேலணை கிழக்கு, நாவலடிப்புலத்தைச் சேர்ந்த திருமதி ஞானேஸ்வரி இராசரெத்தினம் காலமாகிவிட்டார். இவர் காலம்சென்ற திரு. திருமதி நல்லதம்பி இராசம்மா ஆகியோரின் அன்புமகளும், இராசரெத்தினத்தின் அன்பு மனைவியும், கலைச்செல்வி (சித்திரா), சாந்தி, சுரேஷ்குமார் ஆகியோரின் அன்புத்தாயாரும், சூரியகுமார் [சீமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன் துறை], காலஞ்சென்ற சற்குணம், சிவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தர்மலெட்சுமியின் மைத்துனியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 9-12-86 இன்று செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்:- ந. சூரியகுமார்,
நாவலடிப்புலம், வேலணை கிழக்கு-5.

[C-6263]

### பொன்னையா ஏரம்பு



திரு. பொன்னையா ஏரம்பு [இளைப்பாறிய ஆசிரியர், யா/ கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்) காலமானார் அன்னார் காலம் சென்ற பொன்னையா அன்னப்பிள்ளை ஆகியோரின் சிரேஸ்டபுதல்வனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் ஜெயக்குமார் [ஆசிரியர் முள்ளிவாய்க்கால்], மகேசகுமார் (நோர்வே), கலாவல்லி, பரிமளவல்லி, மோகனவல்லி ஆகியோரின் அன்புத்தந்தையும், பேரின்பநாதனின் அன்புமாமனாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 9-12-86 இன்றுகாலை 10 மணிக்கு கச்சேரிநல்லூர்றோட், 39, பாரதிவீதியிலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக அரியாலை, சித்துப்பாத்திமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

[C-6269] தகவல்: குடும்பத்தினர்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100381 Eelanadu P O. Box 49. Telegram. Eelanadu Telephone: 22389— 24126